# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை



| | | |
|---|---|---|
| மலர்: 13<br>இதழ்: 6 | பிலவஹு புரட்டாசிமீ<br>செப்டம்பர்-அக்டோபர் '61 | வருட சந்தா<br>ரூ. 3-00 |





ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் எடுக்கும் ஆரூரர்

பக்கம் 246

## உள்பொருள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | என்ன விநோதம் (திருப்புகழ்மணி) ... | 241 |
| 2. | நெல்லும் பொன்னும் (கி. வா. ஜகந்நாதன்) ... | 246 |
| 3. | குமாரஸ்தவ விரிவுரை (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) ... | 252 |
| 4. | 'குன்றும் குன்றும்' பழனி திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... | 255 |
| 5. | இருதாள் வனசம் (கி. வா. ஜ.) ... | 269 |
| 6. | திருவண்ணாமலையில் அருணகிரியார் விழா ... | 272 |
| 7. | முதன்மை பெற்ற முக்கொம்பன் (ரஸபதி) ... | 275 |
| 8. | WORLD PEACE (*Thiruppugal Mani*) ... | 288 |


---


### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனிமீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

---

குறிப்பு : முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 விதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதர்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி

| மலர் 13 | பிலவ௵ புரட்டாசி௴<br>செப்டம்பர்-அக்டோபர்—1961 | இதழ் 6 |
|---|---|---|

## என்ன வினோதம் ?

(திருப்புகழ் மணி)

இருட்டில்தான் ஜோதி நன்றாய்த் தெரியும். எங்கும் நிறைந்திருக்கும் இரண்டற்ற ஏகதத்துவமே இறைவன். தன்னை நிழல்போல் நாடி நிற்கும் மாயையைத் தானே ஏற்று, கருணையால் வடிவெடுத்தவன் முருகன். நிர்க்குண ப்ரம்மத்தை, ரூபத்தை நாடி நிற்கும் மனிதர்களால் கண்டு பிடிக்க முடியாது. அன்பர் கண்களை யடைத்து மனம் வேறொன்றையும் நாடாம லிருப்பதற்காக, அழகு, வடிவு, அன்பு எல்லாம் ஒன்று சேர்ந்த ஒரு வடிவெடுத்துக் கொண்டார் ஆண்டவன். மாயையைச் செயிக்க, ஆற்றலும் அன்பும் கொடுக்கும் முருகன், மாயையை ஏற்று ரூபமெடுத்ததேன்? பராக்கு பார்க்கும் மக்களால் முருகனைப் பார்க்க முடியாது. அவர்களுடைய கண்களைத் தன் ரூபத்தினால் அடைத்து உள்ளே யிருக்கும் தன் ஸ்வரூபத்தைப் பார்க்கச் செய்வதற்குத்தான்

---

வீணர்சொல் கேட்டு வெறுப்பார்தம் நட்பைவிடு!
கோணர் கலப்புக் கொடுந்துன்பம் கூட்டுமரோ.

முருகன் ரூபமெடுத்தான். முருகனுடைய உருவம் கண்ணுக்குள் அடைக்கலமானால், நாம் முருகனிடம் அடைக்கலமாய் விடுவோம். நாம் காணும் காட்சிகள் அனைத்தும், கண்ணுக்குள்தா னிருக்கிறது.

பாரதியார் கனவில் கண்ணனைக் கண்டார். கண்ட ரூபத்தை நினைவில் நிறுத்த முடியவில்லையே என்று கதறுகிறார். 'ஆசைமுகம் மறந்து போச்சே' என்று பாடுகிறார். மனிதனுடைய ஆசைகளெல்லாம் சேர்ந்து ஒரு ரூபமெடுத்தால், அது தெய்வ உருவாய்த் தானிருக்கும். நினைவு தன் கடமையை மறந்து உருவத்தை மறக்கச் செய்தாலும், நெஞ்சம் நினைப்பதாகிய தன் கடமையை மறக்காது.

'உண்டவர்க் கன்றி உட்பசி யாறுமோ
கண்டவர்க் கன்றி காத லடங்குமோ'

என்றார் சித்தர்.

உட்பசி உள்ளத்தி லெடுக்கும். ஆண்டவனிடம் கலந்தால்தான் அப்பசி யடங்கும். ஆசை தீர ஆண்டவனை மனத்தினு ளுன்னவேண்டும்.

உலகிற்கெல்லாம் ஒரே கண்ணா யிருப்பவன் கந்தனைத் தவிர வேறில்லை. கண்ணனும் அவனே. கண்ணனுடைய வண்ணத்தைச் சொல்ல வந்த பகதர் காதலின் வண்ணத்தைச் சொல்லிவிட்டார். காத லென்பது பக்தியே. காதலினால் உள்ளம் உருகும். காதலில்லாவிட்டால் மனம் கல்லாய்த்தா னிருக்கும். கந்தனைக் காதலில நினைந்து நினைந்து உருகவேண்டும். பிரம்ம சுவரூபத்தை எந்த உருவில் நினைந் துருகுகின்றனோ, அந்த உருவமே காட்சியளவிலும் வந்து உதவும்.

கண் உருவத்தையே காணும் தன்மை வாய்ந்ததாகையால், ரூபத்தைக் கொண்டுதான் அரூபமான

---

வேஙகை புதராலும், அபபுதரால வேங்கையும்
தாங்கும் மதிப்புறலபோல், தானும் தன் செல்வமுமே.

பரம்பொருளைப் பிடிக்கவேண்டும். பார்க்கின்ற ரூபத்தைக் கொடுப்பவன் முருகனானாலும், அவனை இந்த ஊனக்கண்ணால் பார்க்க முடியாது. ரூபத்தையும் அரூபத்தையும் கடந்தவன் முருகன். அவனைப் பார்வையினாலும் பேச்சினாலும் அளக்க முடியாது. காணும் ரூபங்களெல்லாம் அவனுடையனவே. பேச்சைக் கொடுப்பவன் அவனாகையால் பேச்சினால் அளப்பதெப்படி?

'காணொணாதது உருவோடருவது பேசொணாதது உரையே தருவது' என்றார் அருணகிரியார். அவர் முருகனைக் கண்டார். தன்னுள் கொண்டார். முருகனுடைய உணர்ச்சியைத் தன்னுடைய உணர்ச்சியில் கண்டார். தேஜோமயமாயிருக்கும் அம் முருகனை உலகெங்கும் கண்டார். பேச்சிலடங்காத முருகனைப் பேச்சில் பிடிக்கத் திருப்புகழ் பாடவேண்டும். அத் திருப்புகழின் பொருளாயிருப்பவன் முருகனே, வெளியாகவும் ஒளியாகவு மிருக்கும் முருகனைத் திருப்புகழ் பாடினால் பிடித்து விடலாம். கூட்டுறவில் சிறந்தது தொண்டர்களின் கூட்டுறவே. இவர்கள் நானென்ற அகங்காரத்தை விட்டு விடுகின்றனர். ஆகலால், தொண்டர்க ளனைவரும் தெய்வமாய் விடுகின்றனர். எங்கும் நிறைந்த தானாகவும் தனியாகவு மிருக்கின்றான முருகன். உலகத்தி லிருப்பது தெய்வம் ஒன்றே யாகையால், அதற்குத் தனியென்று பெயர். துன்பங்கள நானென்ற உணர்ச்சியை நாடி நிற்கும். நானென்ற பூச்சியை எடுத்தெறிந்து விட்டால மிஞ்சியிருப்பது ஆனந்தந்தான். திருப்புகழென்னும் கத்தியால் தொண்டையை வெட்டினால் பலம் வந்துவிடும். அறிவின் கூர்மையைக் கொடுப்பது திருப்புகழ்க் கத்தியே. முருகனைப் பாடுவதற்கும அவன் புகழைப்

---

முடியா தவற்றை முடித்ததே மௌனபேசல்,
பிடித்த இறுமாப்பு, பீடைதரும் நிச்சயமே.

பேசுவதற்கும் நோயற்ற வாழ்வு வாழவேண்டு மென்றார் வள்ளலார். 'அச்சுதா அமரரேறே என்னும் இச்சுவை தவிர இந்திர லோகமாளும் சுவையும் வேண்டேன்' என்றார் ஆழவார். திருப்புகழி லிருக்கும் பெருமையைத் தொண்டையினால் அடைந்தால் வியாதி வராது. முருகனுடைய ஆறுமுகம் முருகனை யடைவதற்கு வழி. திருமுருகாற்றுப்படை என்றால் முருகனை யடையும் வழிகாட்டி என்பதாகும். முகமே அகத்தைப் பிடிக்கும் வழி. ஆறுமுகமும் முருகன் அகமாகிய முத்தியை யடைவதற்கு வழிகாட்டியா யிருக்கிறது. ரூபமாகிய மாயா விநோதத்தைத் தாண்டு வதற்கு ஞான விநோதமாகிய ஆறுமுகமே வழி காட்டுகிறது. முக்திக்கு ஆறான அலைது வழியான முருகனுடைய முகத்தைப் பார்த்து, அது எங்கு செலுத்துகிறதோ அங்குச் சென்றால் முகதியடைய லாம். "முத்திக்கொரு வித்துக குருபரன்" என்றார் அருணகிரியார். முப்பத்து முக்கோடி தேவர்களும் சகதி மயங்கள. அவர்கள நம் சரீரத்தில் வசிக்கின் றனர்.

அங்குள்ள ஆத்மாவாகிய பகவானுடன் சேர்ந்து விளையாடுகின்றனர். இந்த உலகமே மாயாவிநோத மாகிய விளையாட்டு. உலகமே சிருஷ்டியெனும் பிருந்தாவனம. இந்த பிருந்தாவனத்தில உடலாகிய விளையாட்டுக் கருவியை வைத்துக கொண்டு விளையாடு கிறார் ஆண்டவன். தொண்டருடைய கூட்டமே வள்ளிக் கூட்டம. சரீர தொண்டர்களாகிய தேவர் கள, ஜீவன் ஆண்டவனுடன கலப்பதற்கு உதவியா யிருப்பர். மனிதனுடைய மனத்தைப் பிடித்துத் தன னிடத்தில் கொடுப்பதற்காக, முப்பத்து முக்கோடி தேவர்களையும் சரீரத்தில் காவலாக வைத்திருககிறான

சூழ்நிலைகுத தக்ககுலம் ; தோய்குணங்கள செய்கையினில் வாழிடத்திற்(கு) ஏற்ற வளம்பெறுதல் காண்போமே.

ஆண்டவன். மனத்தை ஆண்டவனிடம் கொடுக்காமல் உலகத்தில் அலையவிட்டால், தேவர்கள் வருத்துவார்கள். அவனுடன் சேர்ந்தால் தேவர்கள் வசமாய் விடுவர். இறைவனை நினைந்து உருகும் மனமே வளளி அல்லது ராதை. உள்ளிலும் வெளியிலும் 'ஓம்' என்று விடுகிற மூச்சே சர்ப்பமாகிய ஆதிசேஷன். இம் மூச்சை 'ஸோ' என்று வெளியிலும், 'ஹம்' என்று உள்ளேயும் இழுக்கும் பொழுது 'ஸோஹம்' ஆகிறது. 'ஹம்ஸஸ் ஸோஹம்' என்றே யோகிகள் உள்ளே பூஜை செய்கின்றனர்.

நானென்பதற்ற சரீரத்தில் மூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் அது எனனும் தத்துவ மிருக்கிறது. முருகனாகிய குருபரன் அது என்னும் தத்துவத்தை உபதேசித்து விட்டான். மூசசைக் கட்டிப் பேசலாம். மூச்சில்லாமல் பேச முடியாது. எல்லாம் தான் என்ற ஓங்கார தத்துவத்தை மூச்சின் மூலமாய்த்தான் யாவர்க்கும் உபதேசிக்கின்றான் முருகன். இதை நெஞ்சில் நினைத்துப் பார்க்க வேண்டும். உள்ளத்தில் குருவாயிருந்து இதை புணர்த்துகிறான் முருகன். முப்பத்து முக்கோடி தேவர்களும முருகனைச் சுற்றி வழிபடுவார்க ளாகையால், முருகனை வழிபட்டால் முப்பத்து முக்கோடி தேவர்களும் நம்மைச் சுற்றுவர். விநோதம இருவகையாகக கூறப்படுகிறது. அது ஞான விநோதம மாயாவிநோதம் எனப்படும். மாயா விநோதத்தை வெல்வதற்குக் கருவியாக உபயோகப்படுவது ஞானவிநோதம். ஞான விநோதத்தை அடைவது வெகு சுலபம். முருகன் இருசரண தியானமே அதற்கு வழி.

---

தனமிழந்த மேலோர் தளர்வுற்ற போதும்,
கனமிழநது தாழ்ந்தோர்முன், கைஏநதல் இல்லையரே.

சுந்தரர் வரலாறு :

# நெல்லும் பொன்னும்

(கி. வா. ஜகந்நாதன்)

சுந்தரமூர்த்தி நாயனுர் திருவாரூரில இருநது எம்பெருமானை வழிபட்டு இனிது வாழ்ந்திருந்தார். குண்டையூா என்னும் ஊரிலிருந்த வேளாளா ஒருவர் பெருமானுககு வேண்டிய நெல், பருப்பு, வெல்லம் முதலியவற்றைப பரவையார் திருமாளிகையிற் கொண்டு வநது சோத்து வந்தார். அம்மாளிகையில் இடையருமல் தொண்டர் கூட்டத்துக்கு விருந்தளித்து வழிபடும் அறம் நடந்து கொண்டே யிருந்தது.

மழையினமையால நிலத்தில விளைவு குனறவே, போதிய அளவு நெல முதலியவறறைப பரவையார் திருமாளிகைக்கு அனுப்ப முடியாத நிலைவநதது. அதை நினைநது வருநதிய குணடையூர் கிழாா துயிலும்போது, அவா கனவில் இறைவன எழுந்தருளி, " ஆரூரனுககாக உன்பால் நெல தநதோம் " என்று கூறி மறைந்தான். விடிநதவுடன் அவர் எழுந்து பாாக்கும்போது தம்முடைய வீட்டைச சுற்றிலும் ஊர் முழுதும் நெல மலைபோலக் குவிநதிருபபதைக் கணடாா. சுநதர மூர்த்தி நாயனுரின பெருமையை எணணி வியநதார். அத்தனை நெல்லையும் திருவாரூருககுக் கொணடுபோய்ச சேர்க்கக் கணக்கற்ற ஆட்கள் வேணடுமே! என செய்வது?

குணடையூர்க் கிழார் திருவாரூர் செனறு நம்பியாரூரரிடம் நெல்மலை குவிந்துளள செயதியைச சொல்லி, அவற்றை எடுத்துவரப் போதிய ஆள இனமையும் சொனனாா. சுந்தரர் குண்டையூர் செனறு நெற்குவியல்களைக் கண்டு, " இறைவன் உம்முடைய வேண்டுகோளுக்காகவே வழஙகி யிருககிறுன " என்று குண்டையூர் கிழாரைப் பாராட்டினர். அபபால் ஒரு

இளைத்தாலும் வேஙகையை, நாயமோகக அஞ்சும;
களைத்தாலும் செலவரைக், கண்டஞ்சும் இவ்வுலகே.

திருப்பதிகம் பாடி, இறைவனே, "இந்த நெல்லைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல ஆள் இல்லை; எப்படியாவது இதனை அங்கே சேர்ப்பித்தருள வேண்டும்" என்று வேண்டினார்.

அன்று இரவே பூதகணங்களை அனுப்பி அந்த நெல் முழுவதையும் திருவாரூருக்குக் கொண்டு சேர்க்கச் செய்தான் எம்பெருமான். காலையில் எழுந்து பார்க்கும்போது பரவையார் திருமாளிகை முனறிலில நெல்மலை குவிந்திருந்தது. வீதியெல்லாம் நெற்குவியல். ஊர் முழுதும் நெற்குன்றங்கள், இறைவன் திருவருட் பெருமையைச் சிந்தித்து வந்தித்த பரவையார், தம்முடைய வீட்டில நிரம்பு மளவுக்கு நெல்லைச் சேமித்தார். அங்கங்கே இருந்த நெல்லை அருகிலுள்ள வீட்டுக்காரர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று முரசறையச் செய்தார். இந்த அருட்செயலால் ஆரூரில உள்ளார் அனைவரும் பயன் பெற்றார்கள்.

ஒருநாள சுந்தரர் திருநாட்டியத்தான் குடி என்ற தலத்தை அடைந்தார். அங்கே சோழனுடைய சேனாபதியாகிய கோட்புலி நாயனார் வாழ்ந்து வந்தார். அவர் சுந்தரரை எதிர் கொண்டழைக்க, அவர் திருமாளிகைக்குச் சென்றார். கோட்புலியார் சுந்தரருக்குச் சிறப்புச் செய்து வழிபட்டார். தம்முடைய பெண்களாகிய சிங்கடி, வனப்பகை என்னும் இருவரையும் அவர் திருவடியில விழச்செய்து, "இவர்களை அடிமைகளாக ஏற்றருள வேண்டும்" என்று வேண்டினார். நம்பியாரூரர், "இவர்கள் என் புதல்வியராகி விட்டார்கள்" என்று சொல்லி அவர்களை உச்சி மோந்து அன்பு செய்தார். இறைவன் திருக்கோயில் சென்று பதிகம்பாடி அதில தம்மைச் சிங்கடியப்பன் என்று சொல்லிக் கொண்டார்.

திருவாரூரில் இருந்தபோது, பங்குனி உத்தர திருவிழா நெருங்கியது. பல ஊர்களிலிருந்து சிவனடியார்கள் வந்து

---

உண்ணி, புலியை உறிஞ்சுகின்ற(து) என்றெடுக்க
எண்ணுதே! மோசமுறும், தீயார்க் குதவுவதே.

கூடும்விழா அது. பரவையார் மாளிகையில் ஆயிரக்கணக்கான அடியவர்களுக்கு அமுதூட்டி உபசரிப்பார்கள். அதற்குப் பொன் வேண்டும் என்ற எண்ணத்தோடு சுந்தரர் திருப்புக லூரை அடைந்தார். இறைவனை வழிபட்டுத் திருக்கோயிலில் அமர்ந்திருந்தபோது சற்றே அயர்ச்சியாக இருந்தமையால், திருப்பணிக்காக வந்திருந்த செங்கற்களை எடுத்துத் தலைக்கு உயரமாக வைத்து உத்தரீயத்தை விரித்துப் படுத்துத்துயின்றார். துயில் நீங்கி எழுந்து பார்க்கையில் தலை மாட்டில் இருந்த அத்தனை செங்கற்களும் பொன்கற்களாக மாறியிருப்பதைக் கண்டு சிவபெருமான் திருவருளை வாழ்த்தினார். "தம்மையே புகழ்ந்து" என்ற திருப்பதிகம் பாடிப் போற்றினார். அந்தப் பொற்குவையை ஆரூருக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பித்தார். பங்குனி உத்தரவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

பிறகு நம்பியாரூர் பல தலங்களை வழிபட்டுப் பதிகம்பாடித் திருவாலம் பொழில் என்ற திருப்பதியில் வந்து தங்கினார். அப்போது கனவில் எம்பெருமான் எழுந்தருளி, "மழ பாடிக்குவர மறந்தனையோ" என்று கேட்டான். துயிலுணர்ந்த நாயனார் இறைவன் அருட்கட்டளையை ஏற்றுத் திருமழபாடி சென்று, அங்குள்ள வச்சிரத் தம்பேசுவரரை வணங்கிப் பதிகம் பாடினார்.

அப்பால் வேறு சில தலங்களுக்குச் சென்று பணிந்து திருப்பாச்சிலாச்சிராமத்தை அடைந்தார். இறைவனைவணங்கித் தமக்குப் பொருள்வேண்டும் என்பதைக் குறிப்பிக்க, பெரு மான் ஒன்றும் வழங்காமல் இருந்தான். அது கண்டு, தம்பிரான் தோழர் என்ற நட்புரிமையை மேற்கொண்டு, "இவரலாது இல்லையோ பிரானார்" என்று கேட்டு ஒரு திருப்பதிகம் பாடினார். இறைவன் விழுநிதிக்குவை அளித்தருளச் சில நாட்கள் அப்பதியில் தங்கினார்.

---

புலி எதிர்த்தால், மானுக்குப் போக்கிடமே இல்லை;
வலியுடையார் முன்அடங்கி, வாழ்வதுதான் தர்மமரோ.

அவ்வூரைவிட்டுச் சிவத் தலங்கள் பலவற்றிற்குச் சென்று வழிபட்டுக் கூடலையாற்றூர் என்ற தலத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்போது இறைவன் ஓர் அந்தணர் வடிவங் கொண்டு அங்கே வந்தான். அவ்வந்தணரை நோக்கி, "திருமுது குன்றத்துக்குப் போகும் வழியாது?" என்று ஆளுடைய நம்பி கேட்க, "கூடலையாற்றூர் போக இதுதான் வழி" என்று கூறிச் சிறிது தூரம் தொடர்ந்து மறைந்தார். இறைவன் அருட்பெருக்கை எண்ணி உருகிய சுந்தரர், "வடிவுடை மழு வேந்தி" என்று தொடங்கி, கூடலையாற்றூர்ப் பெருமானைத் துதித்து, "அடிகள் இவ்வழி போந்த அதிசயம் அறியேனே!" என்று பாடினார்: பின்பு கூடலையாற்றூர் சென்று இறைவனை வணங்கி அங்கிருந்து திருமுது குன்றத்தை அடைந்தார்.

திருக்கோபுரத்தைக் கண்டு பணிந்து எழுந்து கோயிலுள்ளே புக்கு இறைஞ்சி பழமலை நாதரைப் பதிகம் பாடிப் பரவினார். பொருள் வேட்கையோடு பின்னும் வணங்கி, "மெய்யை முற்றப் பொடிப் பூசியோர் நம்பி" என்ற பதிகத்தைப் பாடினார். இறைவன் திருவுளம் மகிழ்ந்து பன்னிரண்டாயிரம் பொன் அருளினான். அதனைப் பெற்று மகிழ்ந்த நாயனார் இறைவனிடம், "எம்பெருமானே, இவற்றை நான் எங்ஙனம் எடுத்துச் செல்வேன்; இப் பொன் முழுதும் ஆரூருக்கு வரும்படி அருள் செய்ய வேண்டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார். அப்போது இறைவன் அசரீரியாக, "இந்த பொன்னை இங்குள்ள திருமணி முத்தாற்றில் இட்டுவிடு; திருவாரூர் சென்று அங்குள்ள குளத்தில் எடுத்துக் கொள்ளலாம்" என்று பணித்தான். தம்பிரான் தோழர் அந்தப் பொன்னில் ஒருபகுதியை மச்சமாக வெட்டி எடுத்துக் கொண்டு எஞ்சியதை மணிமுத்தாற்றில் இட்டு விட்டுப் புறப்பட்டார்.

---

உள்ள பொருளை ஒருவரிடம் ஒப்புடைத்தால்,
கொள்ளைபோம், நெஞ்சம் கொதிப்பேறும் கண்டாமே.

அங்கிருந்து தில்லை சென்று நடராசப் பெருமானை வணங்கிப் பேரானந்த வெள்ளத்தில் ஆழ்ந்தார். வழியிலுள்ள தலங்களைப் பணிந்து திருவாரூரை நண்ணினார். இறைவனைத் தரிசித்துக் கொண்டு பரவையார் திருமாளிகையைச் சார்ந்தார்.

ஒரு நாள் பரவையாரிடம், "திருமுதுகுன்றத்து எம்பெருமான் நமக்குப் பெருநிதியம் அளித்தருளினார். அதை மணிமுத்தாற்றிலிட்டு இவ்வூர்க் குளத்திலே எடுத்துக் கொள்ளும்படி பணித்தான். அவ்வாறே பன்னிரண்டாயிரம் பொன்னையும் ஆற்றிலிட்டு வந்தேன். இன்று போய்க் கமலாலயத் திருக்குளத்தில எடுத்துக் கொண்டு வர" என்று கூறி அழைத்தார். அதைக்கேட்ட பரவையார், "இது என்ன அதிசயம்? இப்படியும் ஒருவர் செய்வாரா?" என்று புன்முறுவல் பூக்க, "எம்பிரான் அருளால ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில எடுத்து 'நிச்சயமாகத் தருவேன்'' என்று உறுதி கூறி, அப் பெருமாட்டியாரை அழைத்துக் கொண்டு திருக்கோயில சென்று இறைவனை வணங்கித் திருக்குளக்கரையை அடைந்தார். குளத்தில் இறங்கி முன்பு இட்ட பொருளைத் தேடுபவரைப் போலக் காலால் துழாவத் தொடங்கினார்.

இறைவன அவருடைய பாட்டுக்கு ஆசைப்பட்டுப் பொன்னை அங்கே காட்டாமல் இருந்தான. கரையில் நின்ற பரவையார், "நீங்கள் செய்த காரியம் நன்றாயிருக்கிறது. ஆற்றிலிட்டுக் குளத்தில தேடினால் கிடைக்குமா?" என்று முறுவலுடன் மொழிந்தார். அதனைப் பொறுத சுந்தரர், "சுவாமி! இந்தப் பரவைக்கு முன் என் மானத்தை வாங்குகிறீரே' என அவமானம் தீரப் பொன்னைத் தந்தருள வேண்டும்'' என்று ஒரு திருப்பதிகத்தைப் பாடினார்.

---

பழ(கு)எருது, புத்தெருதைப் பணப்பாக்கல் போல,
கிழமை உணர்வினர் கேண்மை, நலம் தருமே.

" பொன் செய்த மேனி யினீர்,
புலித் தோலை அரைக் கசைத்தீர்,
முன் செய்த மூவெயிலும்
எரித்தீர் முது குன்றமர்ந்தீர்,
மின்செய்த நுண்ணிடையாள்
பரவையிவள் தன்முகப்பே,
என்செய்த வாறடிகேள்
அடியேன் இட் டளங்கெடவே !

என்பது அப்பதிகத்தின முதற் பாட்டு. எட்டுப் பாட்டுக்கள் பாடியும் பொன் தட்டுப படவில்லை. அதனால் மனம் வருந்திய சுந்தரர்,

" ஏந்தா திருந்தறியேன்
இமை யோர்தனி நாயகனே,
மூத்தா யுலகுக் கெல்லாம்
முதுகுன்றம அமர்ந்தவனே,
பூத்தா ருங்குழலாள்
பரவையிவள் தன்முகப்பே
கூத்தா தந்தருளாய்
கோடியே விட்டளம் கெடவே "

என்ற ஒன்பதாம் பாட்டைப பாடியவுடன் அவருக்குப் பொன் தட்டுப்பட்டது. அதை எடுததுக கரைக்குக கொண்டு வந்தார் அங்கே இருந்தவர் யாவரும் அதிசயிததார்கள். பொன்னை உரைத்துப பார்ததபோது, இறைவன மறுபடியும் அவர் பாட்டை விரும்பிச சற்றே மாற்றுத் தாழும்படி காட்டுவித்தான. சுநதரர் மறுபடியும் இறைவனை வழுத்த, அவருடைய பாட்டை யுவந்து ஆனந்தக் கூத்தையும் உவந்த பெருமான் தக்க மாற்றுடைய பொனனைககிக் காட்டினான். அதனைக் கணக்கிட்டு நிறை குறையாமல் இருபபதைக் கண்டு மனங் குளிர்ந்தார் நாவலாரூரர். பொனனைத திருமாளிகைக்குக் கொண்டு சென்றனர். பரவையாருடன இறைவனைத் தொழுது உருகினர்.

## குமாரஸ்தவ விரிவுரை-ங

(திருப்புகழ்சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை. B.A.,B.T.,)

ஷட்க்ரீவ பதயே நமோநம:

ஷட் - ஆறு, க்ரீவ - கழுத்துக்களை யுடைய, பதயே - தலை வனுக்கு, நமோநம: - போற்றி போற்றி,

செவ்வேள் பரமனது திருவுருவத்தில் திருமுகங்களைப் போலவே திருக்கழுத்துக்களும் அருள் சிறப்பு மிக்கவை. கழுத்துக் களைக கூறவே திருத்தோள்களும் கொள்ளப்படும். கழுத் திலணியும் அணிகலனகளும் மாலைகளும் திருத்தோள்களிலே அசைந்தாடுவன வாகலின.

க்ரீவம் :

க்ரீவம் - என்ற வடசொல் கழுத்து என்று பொருள்படும். இலங்கை வேநதனுக்கும் பூர்வத்தில் இராவணன என்ற பெய ரில்லை. தசக்ரீவன எனறே அழைக்கப் பட்டான. தசகரீவன் என்றால் பத்துக் கழுத்துககளை யுடையவன் என்று பொருள். தசகண்டன் என்றும் அழைப்பதுண்டு. ஒருசமயம் சிவனாிருந்த திருக்கயிலை மலையை அகந்தையோடு ஐயிரு தலையுடை அரக் கன் பெயர்த்திட முயன்றான. உடனே செஞ்சடைப் பரமன தமதுகால் பெருவிரலை அழுந்த ஊன்றினார். அவ்வளவுதான். அரக்கனின் ஒருபது சிரங்களும் இருபது கரங்களும் நெரிந்தன. நோய்தாங்க மாட்டாமல் ஒருபோதும் அழுதறியாதவன கண் ணீர் ஆருய்ப்பெருக அலறி யழுதான. தனதுமுறிதத கைகளில ஒன்றை எடுத்து நசுங்கிய தலையுடனசேர்த்து யாழாகப் பாவித்துச சாமகானம் செய்தான. பரமசிவனார் அவனது பத்திலஙகு வாயாலும் பாடல்கேட்டுப் பரிந்து 'இராவணன்' 'அழுதவன்' எனற பெயரைச் சூட்டி அருள்புரிந்தனர். அன்று

---

பழிபாவம் நாணார் நட்பிற் பயிலல்,
புழுவை உள்வைத்துத் தம் புண்கட்டிக் கொள்வதுவே.

முதல் தசக்ரீவனுக்கு இராவணன் என்று பெயர் வழங்க லாயிற்று. இதனை,

" கைத்தலங்க ளிருபதுடை அரக்கர் கோமான்
கயிலைமலை யதுதன்னைக் கருதாது ஓடி
முத்திலங்கு முடிதுளங்க வளைக வெற்றி
முடுகுதலும் திருவிரலொன் றவனமேல் வைப்பப்
பத்திலங்கு வாயாலும் பாடல் கேட்டுப்
பரிநதவனுக்கு இராவணனென நீந்த நாமத்
தத்துவனைத் தலையாலங் காடன தனனைச்
சாராதே சாலநாள் போக்கினேனே "

என்று அப்பமூர்த்திகள் அருளியதும் காண்க. எனவே க்ரீவம் என்பது கழுத்து என்ற பொருளில் பயின்றுள்ளது புலனாயிற்று. தேவி பகதராகத திகழ்ந்த ஒரு முனிவருக்கு 'அயக்கிரீவர்' எனற பெயரிருநதது என்று தெரிகிறது. ஒரு கழுததுடையவன் பெரியவனு யிருந்தால, அவனுக்குப் பல மாலைகள் சூட்டுவதைப பார்ககிறோம். ஆறுமுக வித்த கனாய் அறிவிற் பெரிய மேனமைக் காமனை முருக பிரானுககு ஆறுதிருக் கழுத்துக்களிலும் அநேக மாலைகள் உள்ளன. அவற்றுள் பல பொன்னாலான பதக்கங்களும், முத்து நவரததின ஆரஙகளும், வேறு பல அணிகளும் உள்ளன. மேலும் கடம்பு, காந்தள், சண்பகம் முதலிய பல மலர் மாலைகளும் உள்ளன. இவையன்றி அகத்து அடிமை யானவர் தொடுத்தகவி மாலைகளும் உள்ளன. உரைபெற வகித்து அருணை நகரினொரு பகதனிடும் ஒளிவளர் திருபபுகழ் மதாணியும் இருக்கிறது.

"பல பலபைம் பொனபதக்கம் ஆரமும்
அடிமை சொலுஞ்சொல தமிழ்ப பனீரொடு
பரிமள மிஞ்சும் கடபபமாலையும் - அணிவோனே "

---

செல்வர்பால இசசகததார் சீர்பெறுவர்; பேரறிவு
பல்ல இருந்தும், பயனில்லை உத்தமர்க்கே.

" கடிமா மலர்க்கு ளின்ப
முளவேரி கக்கு நண்பு
தருமா கடப்பமைந்த - தொடைமாலை
கனமேருவைத தடிநதபன்
னிருமா புயத்தணிந்த
கருணைக ரப்ரசணட - கதிர்வேலா." (திருப்புகழ்)

" ஆயிர முகத்துநதி பாலனும் அகத்தடிமை
ஆனவர் தொடுத்த கவி மாலைக் காரனும்';
(வேலைக்காரன் வகுப்பு)

" உரைபெற வகுத்தருணை நகரிஞெரு பத்தனிடு
மொளிவளர் திருப்புகழ் மதாணிக்கு பாகரனும்
(வேடிச்சி காவலன் வகுப்பு)

" பன்னிரு வாகுவில என சொல்லே புனையும்
சுடர் வேலவனே" (கந்தரனுபூதி)

" வகை வகை குழுமிமொகு மொகுமொகென அநேகசு
முகராக மதுபம் விழச்சிறு
சண்பகம் செறிநத தாரிற் பொலிந்தன"
(புய வகுப்பு)

" உருள்பூந தண்தார் புரளு மார்பினன்"
(திருமுருகாற்றுபபடை)

மேலே கூறிய மாலைகளனைததையும் ஏற்று அவரவர்க்கு அருளும் கருணையே நிறைநதவை கநதன கழுத்துககள் என் பார். 'ஆறு திருக் கழுததுககளுள்ள தலைவன' எனகிருர் பாம்பனடிகள். பதி எனற வடசொல தலைவன எனற பொருளுடையது. பூபதி, நரபதி, சுரபதி, துரகபதி, கஜ பதி முதலிய பெயர்களா லறியலாம். அச சொல் தொடர்நது வரும்போது நானகாம் வேற்றுமை உருபு 'ய' ஏற்று பதி + ய = பதயே என வடமொழி யிலக்கணப்படி மாறியது. ஆதலால 'ஷட்க்ரீவபதயே நமோ நம:' எனக் கூறியது என்க.

## பழனி

# திருப்புகழ் விரிவுரை.

[ குகஸ்ரீ ]

குன்றுங் குன்றுஞ் சென்டுங் கன்றும்
படிவளர் முலையினில் மிருகமத மெழுகியர்
இந்துஞ் சந்தந் தங்குந் தண்செங்
கமலமு மெனவொளிர் தருமுக வநிதையர்
கொஞ்சுங் கெஞ்சுஞ் செஞ்சும வஞ்சஞ்
சமரச முறவொரு தொழில்வினை புரிபவர் விரகாலும்
தும்பும் பம்புஞ் சொம்புந் தெம்புங்
குடியென வளர்தரு கொடியவர் கடியவர்
எங்கெங் கெம்பங் கென்றென் றென்றுந்
தனதுரி மையதென நலமுட னணைபவர்
கொஞ்சந் தங்கின் பந்தந் தெந்தன்
பொருளுள தெவைகளு நயமொடு கவர்பவர் மயலாலும்
என்றென் றுங்கன் றுந்துன் புங்கொண்
டுனதிரு மலரடி பரவிட மனதினில்
நன்றென் றுங்கொண் டென்றுஞ் சென்றுந்
தொழுமகி மையினிலை யுணர்வினி னருள்பெற
இன்பும் பண்புந தெம்புஞ் சாபந்
தழுமிக வருள்பெற விடைதரு விதமுன மருள்வாயே ;
எங்குஞ் கஞ்சன் வஞ்சன் கொஞ்சன்
அவன்விடு மதிசய வினையுறு மலகையை
வென்றுங கொன்றுந் துண்டந் துண்டஞ்
செயுமரி யொருமுறை யிரணிய வலனுயிர்
துங்குஞ் சிங்கம் வங்கந் தள்கண்
துயில்பவ னெகினனை யுதவிய கருமுகில் மருகோனே !

---

பெயயாமழை, பருவ காலத்தில பெயவதுபோல்,
செயயாத ஈகையரும், காலததில் செயவாரே.

ஒன்றென் றென்றுந் துன்றுங் குன்றுந்
தொளைபட மதகசி முகனுடல் நெரிபட
டுண்டுண் டுண்டுண் டிண்டிண் டிண்டிண்
டிடியென விழுமெழு படிகளு மதிர்பட
ஒண்சங் கஞ்சஞ் சஞ்சஞ் சஞ்சென்
றெலிசெய மகபதி துதிசெய அசுரரை அடுவோனே!
உநதன் தஞ்சந் தஞ்சந் தஞ்சஞ்
சிவனருள் குருபர வெனமுநி வரர்பணி
யுந்தொந் தந்தொந் தந்தொந் தந்தென்
றொலிபட நடமிடு பரனரு ளறுமுக
உண்கண் வண்டுங் கொண்டுந் தங்கும்
விரைபடு குரவல ரலர்தரு மெழில்புனை புயவீரா!
அன்றென் றென்றுங் கொண்டன் பின்றங்
கடியவர் தமையிகழ் சமணர்கள் கழுவினில்
அங்கஞ் சிந்தும் பங்கந துஞ்சும
படியொரு தொகுதியி னுரைநதி யெதிர்பட
அன்பின் பண்பெங் குஙகன் டென்பின்
அரிவையை யெதிர்வர விடுகவி புகல்தரு திறலோனே!
அண்டங் கண்டும பண்டுன் டும்பொங்
கமர்தனில் விஜயவ விரதமை நடவிய
துங்கன் வஞ்சன் சங்கன் மைந்தன்
தருமகன் முநிதமல் வருதக ரிவர்வல
அங்கங் கஞ்சஞ் சங்கம் பொங்கும்
கயநிறை வளமுறு சிவகிரி மருவிய பெருமானே!

(பதவுரை). (எங்கும்......உதவிய கருமுகில் மருகோனே!)
எங்கும் வஞ்சன கொஞசன் கஞ்சன் - எந்த இடத்தும் வஞ்சகமே எழுபபிய அற்பன் ஆகிய கம்சன் (எனும்);

---

பள்ளத்தைத் தோண்டி, அங்குப் பாம்பிருத்தல் காண்பார்போல்,
கள்ளத்தால் தொந்தரிக்கும் நண்பர், கலங்குவரே.

அவனவிடும் அதிசய வினையுறும் அலகையை - அவன ஏவிய (தாய்போல் தோற்றும) அதிசய செயல் ஆற்றிய (பெரிய பூதனையாம்) பேயை ;

வென்றும் கொன்றும் துண்டம் துண்டம் செயும் அரி

(ஆரம்பத்தில) வெற்றி கொண்டும், (இடையில் அவளைக்) கொன்றும், (இறுதியில அவள் உடலைப்) பல துண்டங்களாகச சிதற அடிததுப பகையை அழிததவரும் ;

ஒரு முறை இரணிய வலன உயிர் நுங்கும் சிஙகம் - ஒரு சமயம் இரணியன எனும் வலியோனுடைய உயிரைக் குடித்த (வளர்ந்த) நரசிங்க வடிவினரும் ;

வங்கம் தனகண துயில்பவன் - (ஆதிசேடன் ஆகிய) தோணியில் அறிதுயில் கொளபவரும் ;

எகினனை உதவிய கருமுகில் மருகோனே - அனன ஊர்தியன் ஆன பிரமனைப பெற்றவருமான (மாபெரும்) நீலமேகத் திருமாலின மருகனே !;

(ஒனறு என்று ... அசுரரை அடுவோனே !)

ஒனறு என்று எனறும் துனறும் குன்றும் தொளைபட ஒப்பற்ற (மாபெரும்) பரிதி மண்டலத்தை எந்நாளும் அளாவி எழுகின்ற (தொல்லைக) கிரவுஞ்சக மலை தொளைபடவும ; (என்று - சூரியன்.)

மத கரிமுகன உடல நெரிபட - யானைமுக தாருகன் உடல் (நெறு நெறு என்று) நெரிபடவும்;

டுண் டுண்......டிடி என இடும் எழு படிகளும் அதிர்பட-டுண, டுண், டுண், டுண், டிண, டிண, டிண், டிடி எனறு இடிந்து சரிந்து விழும் (அரிய) ஏழு புவனஙகளும் அதிர்ச்சியுடையவும் ;

---

தம்பணியைச் செய்யாமல், தாமசோம்பிச சுற்றுகின்ற வம்பர் உறவுகொளின, வாழ்விழநது மாழ்குவமே.

ஒண் சங்கம் சஞ் சஞ் சஞ் சஞ் என்று ஒலி செய ஒளியுடைய சங்குகள், சஞ் சஞ் சஞ் சஞ் என்று (எடுப்பான) ஒலியை எழுப்பவும் ;

மகபதி துதிசெய அசுரரை அடுவோனே - (புண்ணிய) இந்திரன் போற்றிப் புகழவும், அமரர் பகைவரை அழித் தவனே ! ;

(உந்தன் தஞ்சம் ....., புயவீரா !)

சிவன் அருள் குருபர - பரமன அருளிய பரம குருவே ! உந்தன் தஞ்சம் தஞ்சம் தஞ்சம் என முனிவரர் பணியும் - உமக்கே அடைககலம் ! அடைக்கலம் ! அடைக்கலம் என்று (வாழ்தவ) முனிவர்கள் வழிபடுகினற ;

தொந்தம் தொந்தம் தொந்தநத் என்று ஒலிபட நட மிடு பரன் அருள் அறுமுக - தொநதம் தொந்தம் தொநதந்த் என்று ஒலி தோன்றத் திருக்கூத்து இயற்றுகினற ஆடல் அரசர் அருளிய ஆறுமுகத் தெய்வமே ! ;

உண்கண் வண்டும் கொணடும் தஙகும் - (பயனுன தேன்) பருகும் இடததில் வண்டுகள் இடம்கொண்டு தங்கி இருக்கின்ற ;

விரைபடு குரவு அலர்தரும் எழில் புனே புயவீரா - மணம் கமழ் குரா மலர்மாலை மணம்கமழ் எழுச்சிக் கோலமான தோள்களையுடைய (தொன்மை) வீரனே ! ;

(அனறு எனறு .....புகல்தரு திறலோனே !)

—அனறு என்று ஒனறும் கொண்டு - (எசசமயமும் முத்தி நெறி) அலல எனறு அறிவித்து, (கொள்கையாம் தம்சமயம்) ஒனறை மட்டும் கொணடு ;

அனபின தஙகு அடியவர் தமை இகழ் சமணாகள் - அன் பின அமைந்த அடியாகளை அருவறுதத அமண சமயத்தாரின் ;

---

உதவும் உறவில்லை, இலலைபொருள, எனறும்
இதமிலலை என்றிடியார், எனறும் முயலுநரே.

கழுவின் அங்கம் சிந்தும் - கழுமரத்தில் (ஆக்கை) உறுப்புகள் சிந்தும் அளவு,

பங்கம் துஞ்சும்படி - குறைபட்டு (பொல்லா மரணத்) துயில் பொருந்தும்படிப் புரிந்து ;

ஒரு தொகுதியின உரைநதி எதிர்பட - ஒப்பற்றுப் பெருகிய வெள்ளமெனும் (வைகை) நதியில் (இட்ட ஏடு) எதிரேறிச் செலல ;

அனபின பண்பு எங்கும் கண்டு - அன்புச் (சமயமாம்) சைவத்தின தனமை எந்த இடத்திலும் விளஙக வைத்து ;

எனபின அரிவையை எதிர் வரவிடு கவி புகலதரு திறலோனே - எலும்புக் குவிபலா யிருநத மகளை, (அஙகம் பூம் பாவை என) எதிரில எழுநதருளி வருமபடி, தேவாரம் பாடிய பேராற்றல உடைய பெருமானே ! ;

(அண்டம் .. ..மருவிய பெருமாளே!)

அண்டம் கண்டும - அண்டங்கள் தோன்றும்படி அருளியும ; பண்டு உண்டும் - (உயர்நத அவைகளை) முனனொரு சமயம் விழுஙகியும் ;

பொஙகு அமர்தனில விஜயவன இரதமை நடவிப துஙகன - பொஙகி எழுநத போர்க்களத்தில, விசேட ஜய முடைய அர்ஜுனனது தேரைப (பாகனுகி முனனேற) நடத்திய தூய முதல்வனும் ;

வஞ்சன சஙகன மைநதன தருமகன முனி - கபட நாடகனும், பாஞ்சசனய கரத்தனும் ஆன திருமால அருளிய நான்முகன மைநதரான (நாரத) முனிவர் (நடததிய) ;

தழல் வரு தகா இவர்வல (பெருமானே !) - (வேள்விக்) கனலில் (பெருகிய மநதிரப பிழையால) பிறந்த செம்மறியாட்டை ஏறி நடததவலல பெருமிதனே ; ;

---

வீடணன் ராமனுல வேந்தானுன, மெய்ம்மை
நீடுரததர் சார்பால், நிகழபயனும் நிச்சயமே.

அங்கம் கஞ்சம் சங்கம் பொங்கும் - (தட்ப) உறுப்பான தாமரைகளும், (முத்தீனும்) சங்குகளும் மிகுதியாக விளங்கு கின்ற ;

கயம் நிறை வளமுறு சிவகிரி மருவிய பெருமாளே - பொய்கைகள் நிறைந்த வளம் பொருந்திய சிவகிரியில் (தலமுழுதும்) தாமாக எழுந்தருளி யிருக்கும் (பிரஹ்மம் எனும்) பெரிய பொருளே !,

(குன்றும் குனறும்......விரகாலும்)

குன்றும் குன்றும் (படி) - (எழுந்த) குனறுகளும் தலை கவிழும்படி (எடுபபானதாய்) ;

செண்டும் கன்றும்படி வளர் முலையினில் ம்ருகமதம் மெழுகியர் - (மலர்ச்) செண்டும் கன்றிப போம்படி (மென்மையதாய்), வளர்கின்ற குயஙகளில (புனித) கஸ்தூரிக் குழம்பைப் பூசியவர்களும்,

இந்தும் சந்தம தங்கும் தண் செஙகமலமும் என ஒளிர் தருமுக வநிதையர் - நிலவு போலவும், அழகு குடியிருக்கும் குளிர்ந்த செந்தாமரை போலவும் (சிறந்துளது) எனும்படி, விளங்குகினற முகமுளள வனபபுடைய மாதாகள ;

கொஞ்சும் கெஞ்சும் செஞ்சும் - கொஞ்சுதல், கெஞ்சுதல் (முதலியன) செய்தும் ;

வஞ்சம் சமரசம் உற ஒரு தொழில் வினை புரிபவர் விரகாலும - வஞசகமாக ஒற்றுமை பிறகக ஒப்பற்ற (பொலலாச) செயலகளைப புரிகிற (சூதான) வேசையரது சூழ்சசிகளாலும் ;

(கும்பும பமபும்......மயலாலும்.)

கும்பும் - கும்பலாகக் கூடுதலும் ; பம்பும் - வேடிக்கை காட்டுதலும் ; சொம்பும் - சதா கோலம் செயது கொள்ளலும் ; தெம்பும் - இனப மலாசசியா யிருத்தலும் (ஆன இவைகள்) ;

---

வழியில் முள் தைத்தாலும், எண்ணுச்செல் மாந்தர்,
பழிபாவம் பாரார், பழுதுபட்ட வாழ்க்கையரே.

குடி என வளர்தரு கொடியவர் கடியவர் - (தம்முள்) ...யகின எனும்படி வளரும் கடியத் தக்க கொடியவர்கள் (ஆண இவர்கள்);

எங்கு எங்கு எம் பங்கு என்று என்று- எமக்கு உரிய பங்கு எங்கே எங்கே என்று இடையறாது கேட்டு;

என்றும் தமது உரிமையது என நலமுடன் அணைபவர் எந்நாளும் தம்முடைய சொந்தம் என்று (ஆடவரை, இயற்கையும் செயற்கையுமான) அழகு நலம் காட்டித் தழுவுபவர்;

கொஞ்சம் தங்கும் இனபம் தந்து - சிற்றளவாய்த் தங்கிய இன்பங் கொடுத்து,

எந்தன் பொருள் உளது எவைகளும் நயமொடு கவர்பவர் மயலாலும் - எனக்கென்று இருந்த பொருள்கள் எலலாவற்றையும் நயமாகக் கொள்ளை யடிப்பவர்கள் (ஆகிய அவ்வேசையர் மீது எழும்) மயக்க இசசையாலும்;

(என்றென்றும்..............அருள்வாயே!)

என்றென்றும் கன்றும் துன்பும் கொணடு - எந்நாளும் (உள்ளம்) கனறிப் போகும் (அளவு) துன்பமும் தோய்ந்துள (அடியேன்);

உனது இருமலர் அடி பரவிட மனதினில் நன்று என்றும் கொண்டு - உனது இணை மலர் அடிகளை வழிபடுதல் நலம் என மனத்தால் நம்பியும்;

என்றும் சென்றும் தொழும் மகிமையின் நிலை - எந்நாளும் (உனது ஆலயம்) சென்று தொழுகினற மகிமையின் நிலையை,

உணர்வினின் அருள் பெற - (அடியேன்) உணர்வில் (உனது) அருளால் அடையவும்;

---

பூத்தாலும் காய்க்காத பாதிரிபோல், புல்லர்கள்
மூத்தாலும், நன்குணரா மூடர்களா யுள்ளனரே.

இன்பும் பண்பும் தெம்பும் சம்பந்தமும் மிக அருள் பெற (அங்ஙனம் உணர்வதால) இன்பமும், (அனபுப) பண்பும், உள்ளக் கிளர்சசியும், ஒன்றுதலும் மென்மேலும் விளையும் (பேருன அருளை அடியேன) பெறவும,

விடைதரு விதம் முனம் அருள்வாயே - (நீ) உத்தரவு அளிக்கும் விதத்தை முன் கூட்டி யருள்க, (எ-று).

விரிவுரை.

தந்தையைச சிறையில தளளினுன. அவர் இருந்த அரிய அணையில ஏறினுன. தஙகை தேவகியை, விததக அவள் கணவனை விலஙகிட்டான, நம்பதிகடகுப பிறந்த பல பிளளைகளை, பதைத்துத துடிக்க வதைததுக கொனருன. நல்லோரை நலிந்தான. பொலலாருடன உறவு பூண்டான. வஞ்ச நெஞ்சன. அறப அறிவினன. இஙஙனம் இமசையே செய்யும் அவன பெயர் கம்சன்.

தூயவர் எவ்வளவு பேர் தோனறினுலும், அவர்கள பாரம், இலவம் பஞ்சைச சுமபபதுபோல இருக்கும். இனறே பேயராம் தீயவரே பெருகினர். இரும்பு மூட்டைகளைச சுமபபதுபோல், அளவினறிப பாரம அதிகரிததது. அதனுல, புழுஙகி நெளிந தாள் பூதேவி.

அவள் அலறல், அமைதியா யிருநத பாறகடலில அதிக அலைகளை எழுபபியது; அசைவு அதிகரித்தலால, அறிதுயில் நாரணர் திருக்கண் திறந்தார. உடனே விரைந்தார். புனித தேவகி கருவுள் புகுநதார். கிருஷ்ண பக்ஷ இரவில பிறநதார். அதனுல் கிருஷ்ணன எனறே பெயர் கொணடார்.

அரச குடியிற்பிறந்த அவர், அனறிரவே பொதுவா குடியிற் புகுந்தார. ஜகன மோகன நோக்காலும், இளநகையாலும், கோகுல மக்கள உளதநதைச குளிரச செய்தார்.

---

விதைத்தும் விளையாத வித்துமுள , பேதைககு
இதமாம் உபதேசம், இனபநலன ஈயாதே.

கம்சன் ஒருநாள் முனிவர்களை, மோது மோது என்று மோதினன். அதனால், அதிர்ந்து குமைந்தது ஆகாயம்.

கொடியோனே! பிள்ளை ஒன்று, ஆயர்குடியில் பிறந்துளது. அசசேயால், அண்மையில் உன் வாழ்வு அழியும் என்று, ஆரவாரித்தது அசரீரி. திடுக்கிட்ட கம்சன், என்ன இது என்று திகைத்தான்

பூதனை என்பாள், பொல்லாத பேய் மகள். அவள் பல்வகை மாயம் பயின்றவள்.

போ! அச்சேயைப் பொசுக்கிவிட்டு வா! என்று, அவடகுக் கட்டளை யிட்டான் கம்சன்.

கொடிய அக்காதகி, யசோதைபோல் கோலம் கொண்டாள். அகத்தில் பகை; முகத்தில நகையுடன், நந்தகோபர் மாளிகையுள நள்ளிரவில் நுழைந்தாள்.

கணணனை எடுத்தாள். தொடைமேல் வைத்தாள். குயஙகளில் நிரபபிய நசசுப் பாலை, உவகை காட்டி ஊட்டினள. கள்ளியின களளம் அறிந்த கண்ணன், ஒரே உறிஞ்சலில, பாலொடு அவள் உயிரையும் பருகினன். பதைத்துத துடித்த பாதகி, குரூரமான தன சுயவுருவம் கொணடாள். விழிபிதுஙக, அங்கமெலாம் பங்கம் அடைய, ஆவி சாவி ஆயினள்.

சததிய சாரமான இராம கணக்கு, ஆரமபத்தில் பலியாயினள் தாடகை. கிருஷ்ண லீலையில், முதனமுதல் பலியானவள பூதகி.

'கஞ்சன் ...... ... ..அலகையை...... .....துண்டம செயும்' என்று, இவ்வரலாற்றைப போற்றி உலகம் புகழகிறது. அதன பின எத்தனை சூழ்சசிகள்! எத்தனை மாயஙகள! எவற்றையும் போககி, இறுதியில கம்சனை அழித்தான கண்ணபிரான. அதன பின சாதுக்கள் அமைதி எயதினர்.'

---

இருமைப பயன்விளைய ஈக்னற செலவர்,
கரும்பைச் சுவைத்துப, பின பாகாக்கக் கற்றவரே.

* * * * *

அறிவால் அறிய முடியாதவன் ஆண்டவன். கறியமுதில் உப்பைப்போல் கைங்கர்யத்தில கரைபவர், கடவுளை யடைபவர். இது புண்ணிய மேலோர்தம் புனித அனுபவம்.

மாபெரும் இநத உண்மையை, இரணியன மறுத்தான். வணங்காமுடி வீரனன அவன். ஆணவத்தொடு வாழ்வதே ஆண்மை யெனறு அறிநதான்.

வல்லான் வகுத்ததே வாய்க்கால். எனக்குமேல் ஒரு தெய்வம் இல்லை. இரண்யாய நம: எனறு என்னையே எவரும் ஏத்துதல் வேண்டும். வாழ்ததினரை வாழ வைப்பேன். மற்றவரை மாய்ப்பேன என்று,சீர்கெட்ட ஆட்சி செலுத்தினன.

அது கண்டு அமரர் அஞ்சினர். நலம் சிறந்த முனிவர்கள் நடுஙகினர். பக்தர்கள் பதைத்தனர். பயநதாள் பூதேவி.

துஷட உலகைத் தொலைத்து, பரம சிஷ்யர்களைப் போது காக்க, அந்தி வேளையில் நரசிஙக உருவானர் நாரணர். பெரு கிய உக்ரம கொண்டு இரணியனைப பிடிததார். அரணமனை வாயில படியில அமாநதார். கூரிய நகஙகளால் வயிற்றைக் கிழிததார். அவன குருதியைக் குடித்தார். அவனைச் சார்ந் தாரையும் அழிததார். தீமை தீர்ந்தது. அதனபின அமைதி யடைநதார் ஆதி மாதவா.

'ஒரு முறை இரணிய வலன உயிர் நுங்கும் சிங்கம்' எனறு, இச் செய்தியை இனறும் எண்ணுகிறது மேலோர் இதயம்.

அனறு இருந்த கம்சனும இரணியனும் அழிந்தனர். இன்று அவாகள சாயை. எங்கும் விரவி இருககின்றதுவே!

* * * * *

நின்றால் குடை. இருந்தால சிஙகாதனம். நடந்தால் பாதுகை. உடுததும்போது படடு உடை; படுததால் பாயல்,

---

ஒட்டி ஒனறு சேரா உவர்மண்போல் தீயோர்,
கட்டிக் கதறிடினும், கண்டுதவி செய்யாரே.

இப்படி அளவிறந்த திருப்பணி செய்தலின், ஆதிசேடனுக்கு அநந்தன எனும் பெயர் உளது.

எவ்வளவோ நலம் செய்யும் திருமால், ஒன்றும் அறியாத வர்போல், பாறகடலில் நிழல் பரவ, உடல் சுருட்டிய அநந்தன் மேல் அறிதுயிலில ஆழநதுளா.

அவர் உந்திக் கமலம் மலர்ந்தது. உலகமெல்லாம் படைக் கின்ற பிரமதேவர், அதனி லிருநது பிறந்தார். இபபடி உலக உபகாரரான காாமேக வணணா மகிழும் மருகன் நீ! அதனாலதான, 'கருமுகில மருகோனே' என்று குதூகலத் தோடு உனனைக் கூவுகிறோம்.

சாதுக்கடகுத தொலலை தநத மாயா கிரவுஞ்ச மலையைத் தொலைததனை, திருமால ஏவிய சககரத்தை, மார்பின மதாணி யாக மடக்கி அடககிய பொலலாத தாரகன உடலை, நெறு நெறு என்று நெரியச செய்தனை,

போர்பபறை அதி பயஙகரம் காடடி அதிர, வெற்றிச சங்குகள வீறு காடட, இநதிரன முதலினோர், கா! பிரபோ! கா! கா என்று கதறித துதிகக, ஆகரம அசுரர்களை வேரோடு அறுதத அத்தா!

நீ மாமனுக்கு ஏற்ற மாபபிளளை; அதனால் தான,

ஒன்று என்று என்றும் ..... அடுவோனே! எனறு, உன்னை ஏததி மேலோா இறைஞசுகின்றனர்.

அகத்தில் காம க்ரோதாதி பகைகள; அவைகள புறத்தில் அசுர ரூபம் பூணும்; புறபபகையைத் தொலைத்தது போதுமா! அகப்பகை அழிய வேணடாமா! அதற்கு யாது வழி?

ஒரு சமயம், ஓம் பொருளைச் சிவனார்க்கு ஓதினை; அது கேட்ட அவர், ஆநந்தக் கூததாடினர்.

---

நெய்யிட்டுத் தீபம் நிலைத்தெரிய இன்புறல்போல்,
மெய்ந்நூல்மட் டுங்கற்று, மேனமைநலம் எய்துகவே.

அதை யறிந்த முனிவர்கள், 'சிவன் அருள் குருபரா!' அடைக்கலம் பிரபோ! உமக்கே அடைக்கலம் என்று, பயபக்தி விசுவாசம் கொண்டு பணிகின்றார்.

இந்தத் தொந்தம் வேண்டும்! வேண்டும் எவர்க்கும் இந்தத் தொந்தம் என்னும் ஒலி யெழ, ஆடுகின்றார் ஆடல் அரசர். (தொந்தம்—சம்பந்தம்).

இப்படி ஆடலால் குறிப்புணர்த்தும் சிவனார் அருளிய ஆறுமுகத் தெய்வமே!

குருபரன் என்பதற்கு உரிய அடையாளமாக, குராமலர் மாலை தரித்த எழுச்சியும் பேரழகுமான புயங்களையுடைய ஞான வீரன் நீ. ஆதலின, 'குரவலர் அலர்தரும் எழிற்புனை புயவீரா' என்று, புளகிதம் கொண்டு உலகம் புகழ்கிறது.

மற்றவர்கள் எம் கண்முன் வாழ்வதா என்று, கருவும் கடியவர் கொடியவர் சமணர்கள்

திருஞான சம்பந்தராய வந்தீர். ஊன சம்பந்திகளான அமணர்கள், பல ஆயிரக் கணக்கான அடியருடன், நீ தங்கியிருக்கும் மடத்திற்குத் தீயிட்டனர். மற்றும் பல சாகசம் செய்தனர். வாதம் எழுப்பித் தோல்வி யடைந்தனர். நீ எவ்வளவோ ஆறுதல் கூறியும், கேளாது கழுவில் ஏறினர்.

வைகை நதியில், நீ இட்ட 'வாழ்க அந்தணர்' எனும் திருப்பதிக ஏடு, எதிரேறிச் சென்று, திரு ஏடகப் பதியில் கரை ஏறியது. அதன் மூலம், உண்மைச் சமயத்தை உலகம் உணர வழி செய்தனை!

"இறந்தவர் பிறைப்பது இல்லை." இது உலகர் கொள்கை. திருவருள் துணையிருந்தால், எலும்பும் பெண்ணுருப் பெறும் எனும் அதிசயத்தை, கனிவு மிகுந்து திருமயிலையில் காட்டினை.

---

பனம்பழமே ஆனாலும், தக்கார்க்கே பாலிக்கும்;
இனநல்லூழ் கண்டே, திருமகளும் எய்துவளே.

உலகை உளதாக்கினர்; உண்டாக்கிய உலகத்தை மற்ருெரு சமயம் உதரத்தில் வைத்துக் காத்தார். நலமுறப் பூமியாகிய தேரை நடத்துவதுடன, பார்த்தனுக்குச் சாரதியாகிப் பாரைக் காததார். கபட நாடகர் எனும் பேரும் கொண்டார், பாஞ்சசந்யம் ஏநதிய பரந்தாமர்; அத்திருமால் அருளிய மைந்தர் பிரமதேவர். அந்தப் பிரமன் பெறற புதல்வர் நாரதர். எனவே, நாரதர் கால்வழி எவ்வளவோ நலத்தில் உயர்ந்தது தான.

அம் முனிவா ஆரம்பித்த வேள்வியில், பெருகிய மந்திர ஓசையில் பிழை விளைந்தது. அந்தப பாவம், உருண்டு திரண்டு பயங்கர ஆடாகப பருமை கொணடது. அடாடா! அது செய்த சாகஸம், அளவிட முடிவதிலலையே. தத்தளிதது உலகம் அதனால தடுமாற, அநத யாட்டை ஊர்தியாககி உய்த தனை! ் அதன மூலம் உயந்தது இந்த உலகம்.

முத்துக்களை யீனும் சங்குகளும், செக்கச் சிவந்த தாமரை களும பொஙகி அழகு பொலிநத பொயகைகள், ஏராளமாக சிவகிரியில இருக்கினறன. பழநி மலையில் சததிகிரி சிவகிரி சாநநிதயமாயுள. அதனால அபபதி, சிவகிரி எனறு சிந்திக்கப பெறுகிறது. அபபதி வேறு, தாம் வேறு ஆகாது, அபபதியின சொரூபமாக அமர்நத பெரிய பொருளான உன்னை, 'பெருமாளே' எனறு, வீரிடடுக் கூவி விளிக்கின ரேும்.

பெரும! கேணமையேன விண்ணபபம் கேட்டருளும்! அன்று அழகிய கோலம் காட்டிய மாயா பூதகி, மாய்நதான எனபது உண்மைதான். அவளின் சாயா ரூபம், இனறு எஙகு மாகி இருக்கினறதுவே!

குனறு என விம்மி, மலர்ச செண்டென மெனமை காட் டிய குயஙகளில, கஸதூரி மணததைக் காட்டுகினறனர்.

---

ஆடுகட்கு நாயகாவல் ஆவதுபோல, தககதுணை கூடுனர்க்(கு), எனறும் கொடும்பகைவர் இலலையே.

முழுமதி ஒளியும், செந்தாமரையின் பசுமையும் சிறக்கக் காட்டும் முகததினர் ஆன வேசையா, கொஞ்சுவார் ; மிஞ்சிக் கெஞ்சுவார், வஞ்சகமான வாக்கும் நோக்கும், செயலும் வளர்ந்தவர். விரோதம் எனறும வினையாதபடி, சமாதானம் செய்து கொளளும் சாலபினர்.

கூட்டம் கூடுவார். ஆட்டம் போடுவார். பொய்க் கோலம் புனைவார். தெம்பு கொள்ள செம்புவார். கொடிபோல் துவள்வார்.

ஒரு பிடி உணவுண்பேன ; அடுத்தபிடி எனக்கு எனபார். தாம்பூலம் தரிபபேன்; வாயில இருப்பதில பாதி, எனக்கென்று வாஙகுவார். அதிகம் சொலலி ஆவதென் ? பங்கு கேட்டு எதையும் பறிப்பார். ஏன் ? கேட்க எனக்கு உரிமை யில்லையா என்று, அருகில வந்து அணைப்பார்.

சிறிது நேர இனபம் தநது, பயனுள பொருள்கள் அனைத்தையும் நயமாகப் பறிக்கும நாசகாரிகள் மையலால், ஓட்டாண்டியாகி உளளம உடைந்தேன. எந்நேரமும் இதை எணணி மனம் கணனினேன். இபபடியே சோர்வுதரும் துனபஙகளைச சுமக்கின்றேன பெருமானே !

உன அருள மலர் அடிகளை எணணுவது நனமை ; ஊனறி இதனை உளங கொண்டு, என றும் உன கோயில வலம் வநது வணஙகுவதால வரும் மகிமையின நிலைமை உணர்வில் உதிக்க, பேரின்பமும், சாதவிக குணனும், உளளக் கிளர்சசியும், உனனில் ஒனருகும் உறவும், மேனமேலும் நேரறகுரிய கடடளைச செய்தியை, அதிவிரைவில அடியேற்கு அருள் புரியும் ! அதனபின அடியேன உயவன எனறு, விநயம் காட்டி விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.
ஓம்.

---

குறை கிணற்றில, நீராடல கொளளார் அறவோா;
நிறையதுயராம் என்றறியின, அவ்வழியில நேராரே.

அநுபூதி விளக்கம் :

## இருதாள் வனசம்

(கி. வா. ஜ.)

கருதுதலும் மறத்தலும் ஆகிய இரண்டையும் வேறு ஒரு வகையிலும கொள்வதுண்டு. கருதுவதை விழிப்பு நிலையென் றும், மறப்பதைத் தூக்க நிலையென்றும கூறுவர். இவற்றை ஜாக்கிரமென்றும், சுழுத்தியென்றும் சொல்வா ; சகலமென் றும் கேவலமெனறும் கூறுவதுண்டு. இநத இரண்டும் கடந்த ஒளிபெற்ற நிலையே சீவன் முக்தநிலை, அது வேண்டும் என்று அவாவுகிறார் அருணகிரியார்.

நம்முடைய முயற்சியினால் அந்த நிலையை அடைய இயலாது. முயற்சியின்றியும் அடைய முடியாது. நம் முயற்சி யும் அதற்கு இறைவன அருளதுணையும் இருக்க வேண்டும். ஆற்றில மிதபபவனுக்கு ஓடம மாத்திரம் இருந்தால் போதாது. ஓடத்தைத் தள்ளத் துடுபபோ கோலோ வேணடும். சொநத முயற்சி ஓடமானால், இறைவன திருவருள் கோலாக வந்து உதவவேண்டும்.

ஆதலின கருதா மறவா நெறிகாணும் முயற்சியில் இறை வனுடைய திருவருள் துணையை நாடுகிறார் அருணமுனிவர்.

இருதாள் வனசம் தர என் நிசைவாய ?

"நின்னுடைய இரண்டு திருவடிகளாகிய தாமரைகளைத் தர எபபோது திருவுளங கொள்ளுவாய ?" எனகிறார். உன திருவருள்துணை எபபோது கிடைககும் என்பதுதான் அதற்குப பொருள்.

இறைவனுடைய திருவடியே ஞானமாக இருக்கும் ; அதனைப் பற்றிக கொண்டு அனபு செய்வார், மெல்ல மெல்லப

நலமழிந்தார் ஆயினும், நனமுனனோர் தங்கள்
வலம்கூறி, வாழஎனும் வம்பர்களும் உளளனரே.

பந்தத்தினின்றும் விடுதலை பெறுவர். அந்த முடிந்த நிலையில் அதுவே வீடாக இருக்கும்.

"தொண்டர் கண்டு அண்டிமொண்டு
உண்டிருக்கும் சுத்த ஞானம் என்னும்
தண்டையம் புண்டரிகம"

என்ற அலங்காரச் செய்யுளில் முருகன் திருவடியைச் சுத்த ஞானம் என்றார். வேறு ஓரிடத்தில்,

"புண்டரீகத்தினும், செக்கச்
சிவந்த கழல் வீடு"

என்றார். அங்கே அந்தக் கழலே வீடாவதை உணர்த்துகிறார்.

கருதாமறவா நெறிகாணும் முயற்சியிலே நிற்கும்போது முருகனுடைய இருதாள் வனசம் ஞானமாக நின்று ஒளி பரப்பும்; கருதா மறவா நிலைவந்த பிறகு அதுவே வீடாகி விடும்.

இப்போது நெறி காணும் நிலையில் ஞானமாக வந்து துணை செய்வன முருகனுடைய இருதாள் வனசங்கள். சுடர்த்தாமரை யாகிய கதிரவன் எழுந்தால் விளக்கொளியும் அதனுட் கரைந்துவிடும்; நிழலும் மறையும். அவ்வாறே கருதுதல் என்னும் விளக்கொளியும், மறத்தல் என்னும் நிழலும், சுடர்த் தாமரைகளாகிய முருகன் அடிகள் ஒளி வீசினால் மறைந்து ஒழியும்.

ஒளிவீசும் பொருளில் வெப்பம் இருப்பது இயல்பு. ஆனால் இருதாள்கள் ஒளி வீசினாலும் தண்ணென்றிருப்பவை; தாமரை போன்றவை. வனசம் என்ற சொல்லுக்குத் தண்ணீரில் தோன்றுவது என்பது பொருள். அன்பர் உருகிக் கண்ணீர் விட்டு, அன்பு நீரை உள்ளத்தே தேக்கிக்கொண்டால், அங்கே அந்த வனசங்கள் மலரும். உள்ளத்தே அவை மலர்ந்தால்

---

ஏறவிட் டேணியை வாங்குவார் போலசில்லோர்,
தேறினரை, ஆபத்தில் கைவிடுவர் திண்ணமிதே.

சகல கேவல நிலைகள் மாறி, ஓங்காரத்துள் ளொளிக்குள்ளே முருகன் உருவம் காணலாம். தான தோனறிருல் தொடர்ந்து முயன்றவருக்கு உருவமும் தோனறும் அல்லவா?

"ஆங்காரமும் அடங்கார் ஒடுங்கார்
பரமா னந்தத்தே
தேங்கார் நினைப்பும மறப்பும் அருர்
தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே
முருகன் உருவங்கண்டு
தூங்கார"

என்று அருணகிரியார அலங்காரத்தில் பாடுகிருர். நினைபபும் மறப்பும் அற்ருல ஓஙகாரத்துள் ளொளிக்குள்ளே முருகன் உருவம் காணலாம். அதற்கு முன் நம் உள்ளம் அன்புப் பொய் கையாக மாறவேணடும். அபபோது முருகன் இருதாள வனசம் மலரும. அவற்றைப் பற்றி அனுபவத்தில் உயர்ந்து மேலே நோக்கினுல், உயர் நோக்கு உணடானுல், அவன முழு உருவமும் காணலாம். அபபோது கருதா மறவா நிலைவந்து சித்திக்கும். ஆதலால அந்த நிலைவருவதற்கு முன் வரவேண டிய அநுபவத்தை விரும்புகிருர் அருணகிரியார்.

கருதா மறவா நெறிகா ணஎனக்கு
இருதாள் வனசம் தரஎன்று இசைவாய்?

---

கற்பன கற்று, கடிவ கடியாமல்,
நிற்கும் நெறிமறந்தால், நீள்களங்கம் நிச்சயமே.

# திருவண்ணமலையில் அருணகிரியார் விழா

எங்கே பார்த்தாலும் திருப்புகழ் முழக்கம்; தேவார ஒலி மகிழ்ச்சி ஆரவாரம்; தமிழ் நாட்டிலிருந்தும் பங்களூர் முதலிய இடங்களிலிருந்தும் வந்திருக்கும் அடியார்கள் ஒருவரை ஒருவர் நலம் விசாரிக்கும் அனபுரைகள். இபபடியாக ஒரே அன்பு மயமாக ஆனந்த மயமாகப் பத்தி வெள்ளமாக இருந்தது திருவண்ணமலை. இந்த ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி சுதந்தர தினத்தனறு அருணகிரிநாதர் விழா திருவண்ணமலையில் நடந்தபோது இத்தகைய கோலாகல நிலையை அந்த நகரம் பெற்றது. மற்ற சமயஙகளில் மிக விரிவாகத் தோன்றும் கோயில பிராகாரங்கள, இந்த விழாககூட்டம் புகுநது நெருங்கி அமைதியாக அமர்ந்தபோது, குறுகிவிட்டன. 'இடம போதவிலலையே!' எனற எணணம் உண்டாயிற்று.

சென்னை இறைபணி மனறத்தார் ஏழு ஆண்டுகளுககு முன திருவணணமலையில தொடஙகிய இந்த விழா, ஆணடொரு வளமும் மாதமொரு சிறபபும் உடையதாக வளர்ந்து வருகிறது இநதமுறை ஏழாவது ஆணடு விழா நடைபெறறது. சென்னையிலிருந்து தனியே ஏற்பாடு செயத பனனிரணடு பஸ்கள் அடியார்களை ஏற்றிக்கொண்டு முதல் நாள இரவே புறபபட்டு விடடன. அவை வரிசையாகப போகும்போதே அடியாாகளின திருபபுகழ்ப பஜனை ஒலி அவறறோடு சென்றன. பல தலஙகளைத தரிசித்துக் கொணடு 15-ஆம தேதி காலையில அவை திருவணணமலையை அடைநதன. பஙகளூர் முதலிய இடங்களிலிருநது தனியே திட்டமிட்ட பஸகள் அடியாா வெள்ளததை தாஙகி வநதன.

14-ஆம் தேதியி லிருநதே விழாத தொடங்கி விட்டது. அனறு அமைச்சா திரு. பகதவசசலம் வந்து தொடஙகி.

போம்வழியே தோனருப், புலனமயங்கி ஊர்புகுந்தும்
சாம் வழியே தோனறும், சகவாச தோஷிகட்கே.

வைத்தார். பித்துக்குளி முருகதாஸ் அவர்களின் திருப்புகழ் இன்னிசை மலையில எதிரொலித்தது.

பல ஊர்களிலிருந்து ரெயிலிலும் பஸ்ஸிலும் அன்பர்கள் வந்த வண்ணமாக இருநதனர். எஙகே பார்த்தாலும் அன்பர் களின கூட்டம். காலை 5-28 மணி தொடஙகியே நிகழ்சசிகள் ஆரம்பமாயின. அர்த்தநாரீச சுபரபாதமும் அம்பிகையின் தோததிரமும் தூங்குபவர்களை எழுப்பின; தூங்காதவர்களை உணர்ச்சியூட்டி நிறுத்தின.

தொடர்நது நாதசுர இனனிசை முழஙகியது. நாதசுர சக்கரவர்த்திகள பலா வநதிருநதனர். திருவிடைமருதூர் வீருசாமி, குழிககரை திரு. பிக்ஷையபபா, சிநதாதிரிபபேட்டை திரு. நாராயணசாமி முதலியோர் நாதசுர இசை யமுததைப் பொழிந்தனர. விழாவுககாக அமைத்திருந்த கணணப்பர் பந்தல் முழுவதும் மக்கள் வெள்ளம் நிரமபி வழிநதது. நாதசுர விததுவான்களில திரு. பிக்ஷையபபா, திரு. நாராயணசுவாமி ஆகிய இருவருக்கும பொன்னாடை போர்ததிச சிறபபித் தார்கள்.

அபபால் திருப்புகழ், தேவார பஜனை ஆரம்பமாயின. பங்களூர், மதுரை, சென்னை முதலிய இடஙகளிலிருநது வந்த கோஷ்டிகள் 4-மணிவரையில் பக்தியிசையைப பரப்பினர். அப்பால உரை அரஙகு தொடஙகியது. திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் கணணப்ப நாயனாருடைய வரலாற்றை தமக்கே உரிய தனி முறையில் எடுத்துரைத்தார். பலர் கண்ணீர் விட்டனர். வானமும் சற்றே நீர் சுரந்தது. அபபால் திரு. கி வா. ஜகநநாதன் கந்தர் அலஙகாரத்தைப் பறறியும், ஸ்ரீமதி விஜயலட்சுமி அம்மையார் வேளைககாரன் வகுப்பைப் பற்றியும், திரு. அழகரடிகள ஐந்து நல்ன்களைப் பற்றியும் பேசினார்கள்.

---

காணு உறுப்புகளைக் கண்ணாடி காட்டலபோல,
மாணு முகந்தான், மனநிலையைக் காட்டுமே.

ஆயிரக் கணக்கான பேர்கள் திரண்டு ஊரெங்கும் எள் விழுந்தால் எண்ணெயாகும்படி காட்சி அளித்தார்கள் விழாக்குழு ஒன்று, ஸ்ரீராமநாத சுவாமிகள் தலைமையில் உள்ளூரில், அமைக்கப் பெற்றுள்ளது. இறைபணி மனறத் தினரும் அந்தக் குழுவினரும் சேர்ந்து விழாவுக்குரிய ஏற்பாடு கள் யாவற்றையும் கவனித்துக் கொண்டார்கள்.

முன்பு ஓயாமடம் எனற இடத்தில ஓயாமல் அன்ன தானம் நடைபெற்றது. இந்த ஆண்டு நான்கு இடங்களில் அடியார்களுக்கு விருந்து வழங்கினுர்கள். காலையில் பதினெரு மணிக்குத தொடங்கிய இந்தத தொண்டு, இரவு இரணடு மணிவரையில் தொடர்நது நடைபெற்றது. போலீஸ் காரர்களும் அதிகாரிகளும் தொண்டர்களும் மிகவும் அன் புடன் மக்களுக்குரிய உதவிகளைச செய்தார்கள்.

மாலை 7 தொடஙகியே திருவீதிகளில் பஜனை முழக்கம் எழலாயிற்று: கணககுப் பணணிய கோஷ்டிகள் அறுபத்தாறு. கணககில் அடஙகாதவையும் உண்டு. இவை காந்தியடிகள் சிலை நாட்டியுள்ள இடததிலிருந்து ஒனறனபின் ஒனருகப் புறப்பட்டுக் கொண்டே இருந்தன. பல மலர்களை வரிசை யாகக் கோர்ததாற்போல வெவ்வேறு ஊர்களிலிருந்து வந் திருநத இந்த பஜனைக் கூட்டஙகள, வெவ்வேறு முறையில் திருப்புகழையும் தேவாரததையும் பிற பக்திப் பனுவல்களையும் முழக்கிச சென்றன. எஙகேனும் ஓரிடத்தில் அமாநதுகொண் டால் இரவு முழுவதும் இத்தனை கோஷ்டிகளின் பஜனை களையும் கேட்டுவிடலாம். அருணகிரிநாத சுவாமிகளைத் திரு வீதி வலமாக எழுநதருளச செய்தாாகள.

ஊர் முழுவதும் கந்தலோகமாகவே காடசி அளித்தது. சிறந்த முருகன அடியாாகளையும் நாவலர்களையும் பஜனையில்

---

மரபழிந்தாள், மைந்தன் இடததில மறைந்து
சிரம உணவுண்பாள, சீர்கெட்ட சேயிழையே.

வல்லவர்களையும் ஒருங்கே காணும் சந்தர்ப்பம் அன்பர்களுக்குக் கிடைத்தது.

இந்த விழாவிலே கலந்து கொண்டு இன்புற்றவர்களுக்குத் தனியே ஒரு புத்துணர்ச்சி உண்டாகி விட்டது; அந்த உணர்ச்சியால் தாம் கண்டும் கேட்டும் பெற்ற இன்பத்தை இன்னும் ஆறுமாத காலம் எண்ணி எண்ணி மகிழ்வார்கள். பிறகு அடுத்த அருணகிரிநாதர் விழாவை எதிர்பார்த்துப் பின் ஆறு மாத காலம் ஆர்வத்துடன் கழியும்.

அருணகிரி நாதருடைய அருட்பெருமை வரவர ஓங்கி வருவதற்கு இந்த விழாப் பெரிய சான்று.

---

தேவிதாஸர்கள் 30

## முதன்மை பெற்ற முக்கொம்பன்

[ரஸபதி]

மணமகளும் மணமகனும் மகிழ்ச்சி முகத்திற் பிரதிபலிக்க, மாலை சூடிய கோலத்தில் மணவறையில் அமர்ந்துளர். 'கல்யாணமே வைபோகமே' எனும் பாடல்கட்கு ஏற்ப, இழைந்து குழைந்த நாதஸ்வர ஒலி, எவர்க்கும் இன்ப லாகிரியை எழுப்பியது. புரோகிதர் எழுப்பிய ஓமப் புகை, உயர்ந்த மந்திர ஒலி முதலியவை, நியதியான வைதிக வாழ்வை நினைவூட்டுகின்றன.

வீதியிலிருந்து ஒருவன், விரைந்தான். புனித மணவறையுள் புகுந்தான். பார்த்த கண் வாங்காது மணமகளைப் பார்த்தான். மயங்கியது மனம். குபீரென்று பாய்ந்தான். இளம் மணமகனை எடுத்தான். துடிதுடிப் பதைத்த அத் தோகையை, ஆத்திரங் கொண்டு அடித்தான். துவண்டு விழுந்தாளைத் தோளில் தூக்கினான். வெளிப்பட்டான். ஓடி எங்கோ ஒளித்தான். கணப்பொழுதில் நிகழ்ந்த கண்றாவி இது.

---

அறிவிலா மூடர்கள், விண்மீன்போல ஆனாலும்,
அறிவுமதி யாளன்போல, ஆவாரோ ஓதுவீரே.

அந்தணாகள், இந்த அக்ரமத்தை ஆரம்பத்திலேயே தடுகக முயனறனர். மூாக்கன் எதிரில் அது முடியவில்லே. கோ என்று குமுறினர். ஓட்டம் பெருநடையாக ஓடினர். அரச சமுகத்தை அணுகியதும், வாயில அறைந்தார் பலர்; வயிற்றில் அடித்துக் கொணடார் சிலர்.

அமைதியா யிருநத மனம், அதிர்நதது. என்ன நடந்தது? கூறுஙகள என று குமுறினன் கோபதி.

அரசே! மணவறையில் இருந்த மகளே, பலாத்கரித்து எடுத்தான. குறுக்கிட்டுத் தடுததோம். குததும் உதையும் கொடுத்தோடிப போனுன். வேலியே பயிரை மேய்ந்தால், வேறு எஙகேபோய் முறையிடுவோம்!

என்ன அககிரமம்! அப்படிச செய்தவன் யார்?

வேறு எவர்க்கு அவ்வளவு துணிவு இருக்க முடியும்? தஙகள புதல்வன சத்திய விரதன் சாகசம் தான்.

கொதித்தது நெஞசு. கண்கள குருதி கொபபுளித்தன. ஆத்திரததுடன அணமையில் இருநதாரை நோக்கிய அருணன், இழுத்து வாருஙகள அவனே என று இரைந்தான.

ஏவலர் ஓடினர். அடுத்த கணததுள, இராஜ குமாரனேக் கொண்டு வந்தனா. தகுதியற்ற சத்திய விரதன, தலைகுனிந்து நின்ருன.

தூராதமா! எனன காரியம் செய்தாயடா? உன்னேத் தேசப பிரஷ்டம் செயகிறேன! ஓடிப போய்விடு என று உறுமினன.

வீட்டை விட்டுப போகிறேன! அப்பா! நாட்டை விட்டே போவது என்ருல, நான எஙகுச் சென று வாழ முடியும்?

ஏ மநதாத்மா! அளவு கடநத உன் அக்ரமத்திற்கு சக்கிலிச் சேரிதான் தக்க இடம். என மைநதன என்ற உறவு, இன்றெடு தீாநதது. எதிரில நின்ருல், வெட்டி விடுவேன! போடா! போய்தொலே என று. கடுகடுததுக் கூறினன் காவலன்.

---

பாம்பை விழுஙகும் மயில்போலும் பண்பிஞர்,
ஆம்பகலில் நல்லார்; இரவுகள்ளர் ஆவாரே

வருந்தி வந்த அந்தணர்கள், அரசர் மனநிலை யறிந்து ஆறி மனம் தேறினர்.

* * * *

சத்திய விரதன, தன் தவறை நினைத்துத் தடுமாறினன். அங்கிருந்து ஓடி, சக்கிலிப் பாளையத்தில் சரண் புகுந்தான. விதியை நினைந்து வேதனை எய்தினன்.

நம் குல குரு வசிட்டர். அவர் அறநூல நுட்பம் அறிந்த வர். பிராயச்சிததம் செய்யலாம். பொலலாத என பாவத்தைப் போக்கலாம. தநதையின சீற்றததைத் தணிக்கலாம். எதுவும் செய்யவில்லை; என்னை ஏறெடுததும் பார்க்கவில்லை என று. அவாமேல் அளவிலாத ஆத்திரம் அடைநதான.

சீர்கெட்ட செயல்களைச செய்வது; அதனுல் அளவிலா அவதி யடைவது; எவரும் தனக்கு உதவவிலலை எனறு, வீணுகப் பெரியவர்களை வெறுபபது; இதுதானு உலக இயல். அட பாவமே!

களங்கமற்ற சூர்ய குலததில், பாழும் இபபிளளையால் பழுது பிறந்ததே எனறு, தந்தை அருணன் மனம் நைந்தது. ஏக்கம் மிகுந்தது. அதனுல தூக்கம் தொலைந்தது. அமைதியை விரும்பி, அமைசசர்களிடம் அரசை ஒபபடைத்து, அடுத்த காட்டில் தவததில் அமர்ந்தான.

* * * *

யார் செய்த பாபமோ! எவர் இட்ட சாபமோ! பல ஆண்டுகளாக, வானம் பூமியை மறந்தது. செடிகள் கொடி கள் செழுமை யிழந்தன. பயிர் பசசைகள் வாடின. நாடு பஞ்சத்தால் நலிநதது.

விஸ்வாமித்திரருடைய மனைவி மக்கள், குதூகலமாக அயோத்தியில் குடியிருப்பவர்கள். இவ்வமயம் முனிவர் நகரில இலலை. அவர் சில காலமாக, கௌசிகி நதிக் கரையில் தவத்தில் இருக்கிருர். அநியாயப பஞ்சததால, கோசலதேசம் அலமறும் நிலையை அவர் அறியார். அவருடைய குடும்பம். இங்கு வறுமையால குமைகிறது. பிளளைகள், தாஙக முடியாத

---

மரம்கொல் கருவி, மயிர்கழிக்க ஆகா;
திரக்கல்வி பெற்ருலும், தீமையருர் தீயாரே.

பசியால் கால் தள்ளாடுகின்றனர். அன்னை அரிசி யாசித்து, கதறும் மக்களை ஓரளவு காப்பாற்றி வந்தாள். வரவர அதுவும் கிடைக்கவில்லை.

மன்னரோ நகரில் இல்லை. கணவர் இருககும் இடமோ தெரியவில்லை. நம் ஏழ்மை யறிந்திருந்தும், பொறுபபற்று முனிவர் எஙகோ போயிருககிறுர். பசி தாஙகாமல் எல்லாப் பிளளைகளும் இறந்து விடுவார்கள்போல் இருககிறதே!

பிள்ளைப்பேறு இலலாதவர்க்கு, ஒரு பிளளையை விற்று விடலாம் அநத ஊதியத்தால, இருக்கும் பிள்ளைகளைக காப் பாற்றலாம் எனறு எணணியது ஈனருள் மனம். இதைத் தவிர வேறு வழியே யிலலையே! பல பிளளைகளுள, நடுபபிறநத மகன, கடடழகன, கழுககு மெழுக்கென்று இருபபவன.

அவன கழுததில தர்பபையைக் கட்டினள். நகர வீதியில் மகனுடன நடந்தாள்.

ஆணுல அழகு மனனன்! என அறிவான ராஜ துரை! இப பிளளையை வாஙகுவீரோ? ஐயா விலைககு வாஙகு வீரோ? எனறு, புழுஙகிய மனததுடன். விற்கத துணிந்து பிள்ளையை விலை கூற லாயினள்.

சககிலி பாளையததில இருந்த சத்திய விரதன், இந்த ஓசை யைக் கேடடான. புதைததது மனம். எழுநதோடி வநதான்.

அமமா! எஙகே போகிருய? நில! யார் பிளளை இவன? ஏன விற்கிருய்?

ராஜபுததிரா! நான் விஸ்வாமித்திரர் மனைவி. பஞ்சம் நாட்டை அதிகம பாதிதது விட்டது. இடுவாரும் இலலை. கதறும மற்ற பிளளைகளைக காபபாற்ற, வீதியில இவனை விற்கத் துணிநதேன். பெற்ற வயிறு பெரிதும் துடிககிறதே! பொறுக்க முடியவிலலை, ஐயோ! எனறு, புலம்பினள அப் புனிதவதி.

எததனையோ தவறுகள செயதவனதான; எனினும், சததிய விரதன இதயததில, சுரந்திருநத இரக்கம் சுரநதது.

அம்மா! நானும் திககற்றவன்; என் நிலையில்தான் இச சிறுவனும இருக்கினறுன். வீணக இவனை விறறுவிட

---

மரத்தினகீழ மற்றொர்மரம நட்டால் வளரா;
அரசாணை முன,மறறோ ஆணையது செலலாதே.

வேண்டா. உமது கணவர் வீடு திரும்பும் வரை, உணவுகளை நானே வந்து உதவுகிறேன். நம்புங்கள் என வார்த்தைகளை என்று, நயமாகக் கூறினன்.

வாக்களித்தபடி, பல இடங்களில் இருந்து பறித்து வந்த காய் கனி கிழங்குகளைக் கொண்டு வந்து நாள்தோறும் கொடுத்தான். அந்த அளவில், விஸ்வாமித்திரர் குடும்பம் ஆறுதல் அடைந்தது. ஆறு மாத காலமாக இந்த அனுபவம்.

* * * *

ஒரு நாள் சத்ய விரதன், புனித உணவு தேடிப் புறப்பட்டான். இடை வழியில் வசிட்டர் ஆசிரமம் அவரது பசு, மெல்லிய புல்களை மேய்ந்து கொண்டிருந்தது. கண்ட அவன் மனம் கனன்றது. அவர் மேல் உள்ள ஆத்திரத்தால், அறிவிழந்தான். கண்டவா மனம் கதறிப் பதற, வெட்டி அப்பசுவை வீழ்த்தினான்.

அம்மா! என்ற அதன் மரண அலறல், செவியில் விழுந்ததும், வசிட்டர், ஆசிரமத்துள் இருந்து விரைந்து ஓடி வந்தார். நிலைமையை அறிந்தார். அட பாவி! என்று அலறினார். ஓட முயன்ற சத்திய விரதன், திரும்பினான்; முனிவரை வெறித்து நோக்கினான்.

அன்று பிராமண பத்தினியை அபகரித்தாய்; தந்தையின் சாபம் தாங்கினாய். கொடியோனே! கோ மாதாவை இன்று கொன்றாயடா! பயங்கர இப்பாவங்கள், கொடிய மூன்று கொம்புருவாய், என்றும் உன்னில் இருக்கும்; நீ பிறந்த நாளில், சத்திய விரதன் என்று உனக்குப் பேர் வைத்தது என் பிழை. கோ என்பது, தாய், தந்தை, பசு, தலைவன் என்பவர்களை அறிவிக்கும்; அவர்கள் வழியால் பாபமும் சாபமும் பெற்ற உனக்கு, இன்று திரிசங்கு என்ற பெயரை இடுகிறேன். உரிய இப்பெயரே இனி உலகில் இருக்கும். கொடிய பிசாசு போல் கோர உருவாகி, இனி நீ என்றும் உலகில் இடர் அடைவை வீணன் உன முகத்தில் விழிப்பதும் பாபம் என்று, வசிட்டர் கொதித்து சபித்துக் குதித்து மறைந்தார். கோர ரூபமும், மூன்று கொம்பும் குபீரென்று பிறந்தன.

---

*மருந்துவாமுன் நோயை மறைத்துப் பயனென்?*
*வருத்தம் தவிர்ப்பார்முன், வாய்திறத்தல் நல்லதுவே.*

அதிர்ந்தது மனம். இதுவரை யிருந்த பெயர் இன்றோடு அழிந்ததா! பேதை திரிசங்கு எனும் பெயர் பிறந்ததா! ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு என்பது, என்னளவில் உண்மை யாயது என்று, ஏங்கி மனம் இடிந்த திரிசங்கு, எவரையும் பார்க்க நாணி, ஓடி விஸ்வாமித்திரர் ஆஸ்ரமத்தில் ஒளிந்தான்.

நல்ல நினைவும் தீய நினைவும், மாறி மாறி நெஞ்சத் திரை யில் நிழலிடும். அதற்குத் தக்கவாறு செயல்கள்; ஓயாது ஆகாமியங்கள், இப்படித்தான் உருவாகின்றன. எந்த ஆன்மா விலும் உள்ள செய்தி இது. இவைகளை எண்ணும் போதே இதயம் அதிர்கிறதே!

வனவாசிகளான முனிவர்கள், திரிசங்குவைக் காணும்போ தெல்லாம் கண்ணீர் வடித்தனர். சாபமும், பைசாசத் தன்மை யும் உடையானுக்கு, நாம் என்ன செய்ய முடியும்? என்று, அப் புனிதர்கள் ஒதுங்கிப் போயினர்.

சீசி! அருவருப்பான இவ்வுடலுடன், இனி இருப்பது ஆகாது. ஒழிவதுதான் உத்தமம். அவசரப்பட்டுச் செயல் செய்யும் என்போன்றவர் ஒழிந்தால், பூமிபாரம் குறையும் என்று, எண்ணியது திரிசங்கு இதயம்.

எவரும் அறியா இரவு நேரத்தில், புறப்பட்டான்; காட்டில் கட்டைகளை வெட்டினான். போராகக் கொட்டினான். தீயை மூட்டினான். தீர்த்தத்தில் ஆடினான். நெருப்புக் குண்டத்தின் எதிர் நின்றான். நிமல தேவியை நினைந்தான்.

அம்பா! புவன காரணி! பாரனைத்தும் வெறுக்கும் பாவி யாயினேன். பயங்கர இத்தீ, என் உடலை எரிக்கட்டும்! அழுக்கான தீவினைகளை அகற்றி, சேயாம் என்னை உன் திரு வடி நிழலில் சேர்த்துக்கொள்! இனி இப்பிறவி வேண்டி லேன்! என்று, கலகல கண்ணீர் பெருகக் கதறினான்.

---

கற்றும் தெளிவிலார், காரியத்தைச் சாதியார்;
மற்(று)அவரை நம்பல், மதியீனம் ஆகும்மே.

ஹாவ்! ஹாவ் என்று, விழுங்க ஆவலித்ததுபோல், கனகன என்று கனல்கிறது கனல். பரதேவீ! என்று வீரிட்டுக் கூவி, தீயின் முன்னேக்கிப் பாய்ந்தான். என்ன அதிசயம்! அதே வேகத்தில, பின்னேக்கி வீழ்நதான். அபபடி இழுத்து விட்டவர்கள யார்? திடுககிட்டது மனம்.

எதிரில எழுந்தது தெய்வஒளி; அவ்வொளி நடுவில் உமா தேவி. திரிசங்கு! ஆகாமியததால் அழிந்தது போதும்! எச்சரிக் கையா யிரு! போகிற போக்கில் மனத்தைப் போக விடாதே! உள்ளம் கொண்டு எதையும் உணர்ந்து செய் எனறருளி, திருவுருக் கரந்தாள் தேவதேவி.

தாய் செய்த புண்ணியமோ, தந்தைசெய்த தவபபயனே, இபபடி உயயச செய்தாள் உலகவடிவி. அத்தேவி திருவடி களே அரண் என்று, இடையருது விமலையை எணணி யிருந் தான் திரிசஙகு.

தவம்செய்து கொண்டிருந்த அருணன, பிறகு நாடு திரும் பினன். திரிசஙகுவின விவரம் தெரிந்தது பாழும் புத்திர பாசத்தால வருந்தினன். வற்புறுததி அழைததான. கட்டித் தழுவினன. கண்ணீர் சிந்தினன.

திரிசங்கு! நீ சூர்ய குலத்தவன்; இதுவரை இக்குலத்தவர் கள், எனறும் தவறு செய்ததில்லை. சஞ்சித வாசனையால், பொல்லாத செயல்களையே புரிநதாய். ஆயினும், குல வாசனை யால், ஒருநாள குணம் பெறுவை எனறு நம்பி யிருந்தேன. அதற்கு ஏற்ப, அம்பிகை திருவடிகளில ஆர்வம் செலுத்து கிருய் எனறு, அறிந்தே உன்னை அழைத்தேன.

சத்தியத்தில் புததிவை! நீதி நெறிமுறையை நினை! பொய் பேசாதே! தர்மத்தைச் செய்! வீணன வாதத்தை விடு! யாவையரைத தாயராகப் பார்! வினைப்பிறவி வீழ்ந்துபடும்.

---

தங்கள் மனசாட்சி சாயத், தம்வாயதிறப்பார்
எங்கும் உலகில் இடரடைவர், நிச்சயமே.

காணப்படும் உலகம், தேவியின் கம்பீர சொருபம். என்றும் பரையை ஏததியிரு! அவளால் உன் பாப சாபமெலாம் பறந்து ஓடும் என்று, சிறகக உபதேசம் செய்தான். மங்கல மான ஒரு நாள பார்த்து, மைநதனுக்கு மகுடாபிஷேகம் நடத்தினன.

அதன்பின் அருணன், மனேவியுடன் புனித ஒரு காட்டில் புகுந்தான. சிறந்த தவம் செய்தான. அதன் பயனுக, அத தம்பதிகள் பொன்னுலகம் போயினர். அங்குள இனபம் கணடு இருநதனர்.

அதனபின திரிசஙகு, செங்கோல் தருமம் சிதையாமல், அருமைபெற நாட்டை அரசாண்டான. விமலேக்குப் பிரீதி யான வேளவிகளேச் செய்தான. பேறுதரும் பிளளேயாக, அரிச்சந்திரனேப் பெற்றுன.

ஆண்டுகள் பல இடையில் அகன்றன. எனறும் வாழ்க் கையில இடர். அது அநியாயப் பிறவியின அனுபவம். இதை எண்ணினன. பெருகிய விரக்தி பிறந்தது. மறுமையில் செனறது மனம். அரசுரிமையைப் பிளளேக்கு அளிததான.

குருவின சாபம் கொடியது; அவா மனத்தை நான அவ் வளவு நோக வைததேன். அவர் திருவடிகளே அடைக்கலம் புகுவதுதான் நனமை என்று, உணாநதது அவன் உள்ளம். அவர் ஆஸரமத்தை அடைநதான. எட்டுறுப்பும நிலம் தோய அவரை இறைஞ்சினன்.

மகாநுபாவா! சர்வ மநதிர தந்திர சர்வக்ஞ! மாபெரும் அடியேன் குற்றஙகளே யெல்லாம் மன்னித்தருளும். நாயேன் விணணப்பத்தை, நனமனத்துடன கேட்டருளும்!

போகமும் சுகமும் பொருநத, அடியேனேச் சுவர்க்கத்திற்கு அனுபபி வையும்! அதனே அடைவிக்கும் வேள்வியை ஆரம் பியும் எனறு, விஙயம் மிகுந்து விண்ணபபிததான.

---

பிததரைக் கணடஞ்சிப பினவாஙகு வாரபோல,
உத்தமா, தீயவரைக் கணடு ஒதுங்குவரே.

திரிசங்கு! நீ நல்லவன்; எனினும், அவசரம் அதிகம். பாழும் அந்த வேகத்திற்கு, எம்போனருரைப் பலியாக்கப் பார்க்கிருய். ஊன் உடலுடன, உம்பர் நாட்டில் உலவ முடியாது. இவ்வுடலை விட்டவர்க்குத்தான் அங்கு இடம். பயனற்ற உன் கோரிக்கையை எண்ணிப பயபபடுகிறது என் மனம். முதலில் வேள்வி செய்; இறந்தபின் சுவர்க்கம் எளிதில் கிடைக்கும்!

அமைதியும் சோம்பலும் ஆத்திரமுமான முக்குணஙகளும், மாறி மாறி வருவது மனித இயல்பு. அதற்கு ஏற்ப, நல்லவனுக மாறி யிருந்த திரிசங்குவிற்கு, வசிட்டரின் உண்மை வார்த்தைகள், வறளவைக்கும் கோபத்தை அதிகம் வளர்த்தன.

பிராம்மணரே! எனபால நல்லெண்ணம் உமக்கு எப் போதும் இல்லை. அதை அறிந்திருந்தும், என் அறியாமையால் வீணுக உம்மிடம் இதை விண்ணபபித்தேன். குல குருவான நீர், என விஷயததில் மட்டும் கொடிய துரோகியாகிறீர்! வேறு ஒருவரைத் துணைக்கொளகிறேன; எப்படியும் என எணணம் நிறைவேறும் எனருன. எள்ளும கொள்ளும் போல், இபபடி விறுவிறுதது அவன சொறகள் வெடிததன.

அவன அறியாமையை அறிந்து, புனித வசிட்டர் சிறிது பொறுத்திருககலாம். முக்காலம் உணர்ந்த முனிவரே யாயினும், அவரும் ஒரு ஆன்மாதானே. அந்த சுபாவத்தால், அவன வார்த்தைகள் அவர்க்கு மோதும் சினத்தை மூட்டின.

ஏ துனமதீ! குருரமே உன்னிடம் குடியுளது. சால்பறியாத சணடாளன ஆவை! சககிலி ஆவை! நலல நெறிககு ஓர் நாசகாலன ஆன நீ, புனித பொன்னுலகப புண்ணியம் அறியாய்! போ! என் கண்முன இராதே! எனறு வசிட்டர் பொரிந்தார்.

---

மருநதாகி மற்ரேர்க்(கு) உதவும் மரம்போல,
வருந்துவார் முனவந்(து) உதவுவார் வண்மையரே

காயத்திரி ரூப சக்தியை உபாசிக்கும் அவர் வாக்கு, அப்போதே பலிததது. சக்தி உபாசகன், அதே தேவி உபாச கர்களை அவமானப படுத்தினுல, அதனுல் வரும் விளைவை அறிவிபபதுபோல், திரிசங்குவின் அரச பொலிவு அகன்றது. சக்கிலி ரூபம் சார்ந்தது. பொன குண்டலம், கறகுண்டல மாகக் கறுத்தது. அவன உடல், யானைததேகம் போல ஆயது.

நடுங்கியது உடல. குமைந்தது குடல். அவசரத்திற்குப் புத்தி மட்டுதான். அறுவறுபபான உடலுடன, எங்கும் செல்ல நாணினன. காட்டிலேயே தங்கிக் காலம் கழித்தான. நஞ்சுண்ணலாம். தீயில விழுநது தீரலாம். ஆயினும், இந்த அகால மரணம் ஆத்ம ஹத்தி யாகுமே! செய்த கன்மததை, அனுபவித்தே கழிபபதுதான் சரியான மார்க்கம் என்று மனம் எணணியது.

புணணிய பொய்கைகளில் ஆடினன. சாதுக்களை வந்திததான, தன பிறப்பை நிந்தித்தான. சாம்பவியைச் சிந்திததான.

விவரம் அறிந்த அரிச்சந்திரன், வந்து எவ்வளவு வேண்டியும், நாட்டை யடைய மறுத்தான. இருந்த இடத்தில் தேவியை தியானிதது இருந்தான்.

* * * * * *

விஸ்வாமித்திரரது முதனமைத் தவம் முடிந்தது. கண் திறந்தார். பஞ்சத்தால உலகம் பட்ட பாட்டை, பதைத்த மனத்துடன் அறிவிததனர் பலர். முனிவர், தன் குடும்பத்தை நினைந்தார், பொறுக்கொனறு எழுந்தார். விரைநது புறப்பட்டார். புனித தன ஆஸ்ரமத்துள புகுந்தார். மனைமக்கள் நலம் கணடு மகிழ்ந்தார்.

---

எலியுளதேல், பூனைக்குப பாலுண்டு இலலில,
வலியாம் பகையிலதேல், காபபெதற்கு மன்னற்கே.

ஸ்வாமி! பஞ்சத்தால் மக்கள் பதைத்தனர். பசிக்குப் பனம்பழம் தின்பார்போல், புதல்வன் ஒருவனை விற்கப் புறப் பட்டேன். உத்தம சத்யவிரதன இடையில் வந்து உதவ வில்லையேல், இந்நேரம் மடிந்து குடும்பம் மண்ணு யிருக்கும். அந்த உத்தமன. வசிட்டர் சாபத்தால் திரிசங்குவாகி, எங்கோ திரிந்து கொண்டிருக்கிறன் என்று, பெரிய துயருடன், விவ ரங்களை அவர் தேவி விவரிததாள்.

அப்படியா செய்தி! பெண்கள் திலகமே! நீ வருந்தாதே! மாபெரும் அந்த உபகாரியை மறவேன். என் வித்யா பலத்தாலும், தவ சக்தியாலும், அவன பெற்ற சாபததை அகற்றுவேன எனற விஸ்வாமித்திரர், அப்போதே அங்கிருந்து அகனறர்.

தக்காரை வினவி, அவர்கள் மூலம் திரிசங்கு இருக்கு மிடம் அறிந்தார். ஒரு மரத்தின நிழலில் அவன் தலைகுனிந்து இருந்தான.

திரிசங்கு! என்றர் திடுக்கிட்டு நோக்கினன்; அவா வருகை கணடு வியநதான. திருவடிகளில விழுந்தான். பொருமித் தேம்பிப புலமபினன.

அஞ்சாதே! எனற விஸ்வாமித்திரா, அவன் வாய்மூலம் சாப வரலாறறை அறிந்தார். ஒரு வேள்வி செயய, சிறக்கச சம்பாரங்களைச் சேகரித்தார், அருநதவ முனிவர்களை, துணைக்கு அழைத்தார். வசிட்டர்க்கு அஞ்சி, அவர்கள வர மறுத்தனர்.

சரி. வருவது வருக. திரிசஙகு! இதோ என தபோபலத தைப பார்! இனறே உனனைச சுவர்க்கததில ஏற்றுகிறேன என்று, கமணடல நீரைக் கரததில் வார்த்தார். இதுவரை நான் உருவேறறிய காயத்திரி மந்திரப பயனை, தனியிருந்து

---

பெண்களையே பெற்றவன் பேரிரககத திற்குரியோன்
எண்ணிறந்த செல்வம்போம் ஏது உலகியல்பே.

உனக்குத தததம் செய்கிறேன். பொன்னுலக போகம் பொருந் துக நீ! புறப்படு! மேலே போ என்ருர்.

எனன அற்புதம்! காயதரிககுததான் எததனை கம்பீரம் விர்ரெனறு அவன் உடல் விண்ணில எழுந்தது. பொன் னுலக அண்மையில் போயினன்.

அதை இந்திரன் அறிநதான். சண்டாளன், இஙகு வரத் தகுதி யறறவன. போ பூலோகததிற்கு எனறு, வெருட்டி மிரட்டி விரட்டினன. அமர உலகில் வாழ்ந்த ஆனமா, புணணியம் தீர்நதபின பூலோகத்தில வீழ்தலபோல், விரைந்த திரிசங்கு தேகம, தலைகீழாகி நிலம் நோக்கி வருகிறது.

அபயம்! அபயம் எனற அலறல், அந்தரத்தில எழுந்தது.

திடுக்கிட்ட விஸ்வாமித்திரர், மேல் நோக்கினுர், நிலை மையை உணாநதார்.

நில! அஙகேயே தடைப்பட்டு நில் என்று, பழுத்த தவ வலிமையைப பயனபடுததிக் கூவினுர். அந்தரத்திலேயே தடைப்பட்டது அவன உடல்.

விஸ்வாமிததிரர், ஆசமனம் செய்தார். இரணடாவது தேவ உலகைச சிருட்டிக்க நினைததார். அதற்கான அரிய ஒரு வேளவியை ஆரம்பித்தார். அதன பயனுக, விண்ணில் ஒரு உலகம், அரை குறையாக உருவாக ஆரம்பித்தது.

அமரேநதிரன, அதை அறிநது அஞ்சினன். வேகமாக, முனிவா கண்முன் வந்தான்.

ஸ்வாமி! கடும சினத்தால் மனம் கலஙகி யிருக்கிறீர்! சிருட்டிகக முயனறது போதும்; என்ன செய்ய வேண்டும் அதை விரைவில் அறிவியும்!

இநதிரா! திரிசங்கு, சுவாககம் சேரவேண்டும்! இதுவே என் கருதது.

---

பூவொடுசோ நார்மணக்கும் எனபதுபோல், புண்ணியர்கள் தாவிச சிறியவரைத் தக்ககுணம் செய்வாரே.

அவர் தபோபலததிற்கு அஞ்சிய இநதிரன, திரிசஙகு விற்கு நுண் உடலான திவ்ய மேனியைத தந்தான. விமானத் தில் ஏற்றினுன். அழைத்துச் சென்ருன். அது கண்டு ஆறி மனம் தேறிய கோசிகா, தம் ஆஸ்ரமததை அடைந்தார். தூய உடல் போனபின, சூக்கும தேகம் சேர்வை; சுவாக்கம் அப் போது கிடைககும் என்று வசிட்டா அனறே அறிவித்தார். இன்றும் நுண்ணுடல பெற்றபின்தான, பொன்னுலகில் புகமுடிநதது. சிறிது பொறுககாமையால, எவ்வளவு தொலலே!

சுவாக்கம புகுந்த திரிசஙகு, பூலோக வாழ்வில புததி கெட்டு, நேர்ந்த அவதிகளே நினைததான். விண்ணின போகங் களே வெறுத்தான். வாழ்வில் விரக்தி வளாந்தது. அங்கிருந்த படி, வாக்காலும், நோககாலும், அகத்தாலும் அமலேயைச சதா ஆராதிததான. அதன பயனுக, பேசும் தேவியின பேரருள் நிழலேப பெற்ருன. போலி நகை; போலிப்பேசசு; பொம்ம லாட்டமான வாழ்க்கையில், பொருமுவதுதான கண்டபலன் இம்மையிலும் அந்த நிலே. மினுக்கும வாழ்வுடைய மறுமையி லும் அதுதான அனுபவம். அறியாமை கலவாத அறிவு; மறதியே யில்லாத நினேவு; இருளே கலவாத ஒளி. துனபமே கலவாத இன்பம். ஆம், இதுதான் முதலவியின் அருளால பெறும் முதன்மைப் பேறு. அபபேறு பெறறவர்களே பெரியர். நலம் சிறந்த அவர்களேப் பின பற்றுவதுதான் நலம்.

வாழ்க தேவி தாஸர்கள்.

ஓம்.

---

பணியாளன லேசுபிழை பாராட்டல் ஆகா;
அணிபறையை ஓயா(து) அடிப்பார்தாம் இல்லேயே.

# WORLD PEACE

The one subject on which the mind of the world is perturbed today is 'World - Peace.' That is the one thing that Bhaktas wish for. They hate not, where even they are hated. With olive in their hands, with loving greetings in their lips they go about with the name of Lord, a name that stands for peace. The universality of their love pervades the entire world. Every living being is a habitation of his God who is seen in the world in forms countless With this universal philosophy and with universal love. the Bhaktas would form the sturdy background for universal peace 'சாதுக்கள் சங்கத்தினால் ஜகத்தனில் சாந்தி நிலவுகவே'

This is the basic commandment of Saint Agastiar.

Life can never thrive amidst death and destruction, for, life is cheer, where there is no cheer, there is no life. A true spirit of self-abnegation and the sacrifice of all individual gains, constitute the basic foundation of love and peace. May all the Bhaktas in the world practise with determination and strength, a spirit of world brotherhood which will help the forces of peace, and give no room for conflict. May the world live in peace - eternal peace.

*Thiruppugal Mani.*

சீத நாள்மலர்க் கோயில் மேவுசெங்
திருவின் நாயகன், தேவ நாயகன்,
வேத நாயகன், பூத நாயகன்,
விரத நாயகன், விபுதர் நாயகன்,
போத(க) ஆதிபன், முதலை வாயிடைப்
பொறை தளர்ந்து முன் பொதுவிலே நினைந்(து)
ஆதி மூலமே என்ன, முன்வரும்
ஆதி நாயகன் அடிவணங்குவாம்.

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Regd .No.M. 5390 Amirthavachani புரட். (1961 -அமிர்தவசனி 13-6.

Coffee
Ours for Quality

RAW ROAST OR GROUND
GANESH & CO., (MADRAS) LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்
சுவர்ண மாளிகை
A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி :: மதுரை-
Tel: "FAITH" Estd: 1924. Phone: 113




குடை மார்க் பினுயில்
(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளர்:
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3. டெலிபோன்: 33982
விநியோகஸ்தர்கள்:
கார் & கம்பெனி
1/6, செகின் லேன் பீச்,
சென்னை-1. டெலிபோன்: 22058

**அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:**

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைந்தபடியால், தயை கூர்ந்து பிலவ வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.**

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 54, Bunder Street, Madras-1.